Postal Reg.No. GDP-39/2017-2019

بسم اللہ الرحمن الرحیم نحمدہ ونصلّی علیٰ رسولہ الکریم وعلیٰ عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 2

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 50

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

25 ரபீவுல் அவ்வல் 1439 ஹிஜ்ரி கமரி 14 ஃபத்ஹ் 1396 ஹிஜ்ரி ஷம்ஸி

14 டிசம்பர் 2017

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்ஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**பஞ்சாபிலும் இந்தியாவிலும் உள்ள மக்கள் எந்த அளவு என்னுடன் சீர்கேடாக நடந்து கொண்டனர் என்றால், அவர்கள் என்னை தமது கால்களுக்குக் கீழே நசுக்கி விட விரும்பினர். அப்போது அம்மக்கள் தமது உயிரை மாய்த்துக் கொண்டு செய்த முயற்சிகளில் கண்டிப்பாக வெற்றி பெற்றிருக்க வேண்டும். மேலும், அவர்கள் என்னை அழித்திருக்க வேண்டும். ஆனால், அவர்கள் அனைவரும் தோல்வியைத் தழுவினர். அவர்கள் தரப்பிலிருந்து இந்த அளவு கூச்சலும், என்னை அழிப்பதற்கு இந்த அளவுக்கு அவர்கள் முயற்சியும், எனக்கு எதிராக உருவாகியுள்ள இந்த வலுவான புயலும் இறைவன் என்னை அழிக்க நாடியிருந்தான் என்பதனால் உருவானவை அல்ல என்பதை நான் அறிவேன். மாறாக, இறைவனின் அடையாளம் வெளிப்படுவதற்காகவும், எவரிடத்திலும் தோல்வி அடையாத வல்லமையுள்ள இறைவன் இந்த மக்களுக்கு எதிரில் தனது சக்தியையும் ஆற்றலையும் காட்டுவதற்காகவும், தனது வல்லமையின் அடையாளத்தைக் காட்டுவதற்காகவும் இவை உருவாகின. பிறகு, அந்த இறைவன் அவ்வாறே செய்து காட்டினான்.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

**100 -வது அடையாளம்** பராஹீனே அஹ்மதிய்யாவின் 241 -வது பக்கத்தில் எழுதப்பட்டுள்ள அந்த முன்னறிவிப்பாகும். அந்த முன்னறிவிப்பின் வாசகம் இதுவாகும்.

لَا تَيْئَسْ مِنْ رَّوْحِ اللهِ۔ اَلَآ اِنَّ رَوْحَ اللهِ قَرِيْبٌ۔ اَلَآ اِنَّ نَصْرَ اللهِ قَرِيْبٌ۔

يَأْتِيْكَ مِنْ كُلِّ فَجٍّ عَمِيْقٍ۔ يَأْتُوْنَ مِنْ كُلِّ فَجٍّ عَمِيْقٍ۔ يَنْصُرُكَ اللهُ مِنْ عِنْدِهٖ۔

يَنْصُرُكَ رِجَالٌ نُوْحِيْ اِلَيْهِمْ مِنَ السَّمَآءِ۔ وَلَا تُصَعِّرْ لِخَلْقِ اللهِ وَلَا تَسْئَمْ مِّنَ النَّاس

*(1881 மற்றும் 1882 -ல் அமிர்தசரஸிலுள்ள ஸஃபீர் ஹிந்து அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்ட பராஹீனே அஹ்மதிய்யாவின் 241 -வது பக்கத்தைப் பார்க்கவும்)*

மொழியாக்கம்: இறைவனின் அருளின் மீது நீர் அவநம்பிக்கை அடைய வேண்டாம். இறைவனின் அருள் அருகில் இருக்கின்றது என்பதை நீர் செவிமடுப்பீராக! கவனமாகக் கேட்பீராக. இறைவனின் உதவி அருகில் இருக்கின்றது. இந்த உதவி எல்லா வழியின் மூலமாகவும் உம்மை வந்தடையும். எல்லா வழியின் மூலமாகவும் மக்கள் உம்மிடம் வருவர். எந்த அளவு அதிகமாக அவர்கள் வருவார்கள் என்றால் எந்த வழிகளில் அவர்கள் நடப்பார்களோ அவை பள்ளமாகி விடும். இறைவன் தன்னிடமிருந்து உமக்கு உதவி செய்வான். உமக்கு உதவும் மக்களது உள்ளங்களில் சுயமே நாமே வஹியை இறக்குவோம். ஆனால், உம்மிடம் வருகின்ற இறைவனின் அடியார்களிடம் நீர் தீய ஒழுக்கத்துடன் நடந்து கொள்ளக் கூடாது. மேலும், அவர்கள் அதிகமாக இருப்பதைப் பார்த்து அவர்களை சந்திப்பதனால் சோர்வடைந்து விட வேண்டாம். இந்த முன்னறிவிப்பு செய்யப்பட்டு இன்று 25 வருடங்கள் கழிந்து விட்டன. அப்போது இந்த முன்னறிவிப்பு பராஹீனே அஹ்மதிய்யாவில் வெளியிடப்பட்டது. இது நான் எவராலும் அறியப்படாமல் ஒரு மூலையில் மறைவாக இருந்து வந்த அந்த காலத்தில் செய்யப்பட்ட முன்னறிவிப்பாகும். என்னுடன் இன்று இருந்து வருகின்ற இந்த அனைவரிலிருந்தும் எவரும் என்னை அறிந்திருக்கவில்லை. ஏதாவது ஒரு வகையில் பிரபல்யமாக இருந்ததன் காரணமாக உலகில் பேசப்படுகின்ற மக்களில் ஒருவனாக நான் இருந்ததில்லை. சுருக்கமாக, நான் ஒன்றுமற்ற நிலையில் இருந்தேன். மக்களில் ஒருவனாக மட்டுமே நான் இருந்தேன். எனது குடும்பத்தைப் பற்றி முதலிலேயே அறிமுகம் கிடைத்திருந்த, மிகவும் அரிதாக என்னைப் பற்றி அறிந்திருந்த ஒரு சில மனிதர்களைத் தவிர ஒரு நபர் கூட என்னுடன் தொடர்பு வைத்திருக்க -வில்லை. மேலும், இது எத்தகைய ஒரு நிகழ்வாக இருக்கின்றதென்றால் காதியானில் வசிப்பவர்களில் ஒருவர் கூட இதற்கு எதிராக சாட்சி கூற முடியாது. இதற்குப் பிறகு இறைவன் இந்த முன்னறிவிப்பை நிறைவேற்று -வதற்காக தனது அடியார்களை அவன் என் பக்கம் திரும்பச் செய்தான். மக்கள் கூட்டம் கூட்டமாக காதியானுக்கு வந்தனர். இப்போதும் வந்து கொண்டிருக்கின்றனர். ரொக்கமாகவும் பொருளாகவும் எல்லா வகையான அன்பளிப்புகளையும் எந்த அளவு அதிகமாக மக்கள் எனக்கு தந்துள்ளனர்; இன்னும் தந்து கொண்டிருக்கின்றனர் என்றால் அவற்றை என்னால் எண்ணிப் பார்க்க முடியவில்லை. சில மவ்லவிகளின் தரப்பிலிருந்து தடைகள் ஏற்படுத்தப்பட்டன. மக்கள் கூட்டம் என் பக்கம் திரும்பாமல் இருக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் தங்களால் இயன்றவரை வலுவாக என்னை எதிர்த்தனர். எதுவரையென்றால், மக்காவிலிருந்து ஃபத்வாக்களை வரவழைத்தனர். ஏறக்குறைய 200 மவ்லவிகள் எனக்கு எதிராக குஃப்ர் ஃபத்வா வழங்கினர். இன்னும் சொல்வதென்றால், நான் கொலை செய்யப்பட வேண்டியவன் என்று கூட ஃபத்வாக்களை வெளியிட்டனர். ஆனால், அவர்கள் தமது எல்லா முயற்சிகளிலும் தோல்வியைத் தழுவினர்.

இறுதியில் என்ன நடந்தது என்றால், எனது ஜமாஅத் பஞ்சாபிலுள்ள எல்லா நகரங்களிலும் கிராமங்களிலும் பரவி விட்டது. இந்தியாவிலும் கூட பல இடங்களில் அதன் விதை விதைக்கப்பட்டு விட்டது. இன்னும் சொல்வ -தென்றால் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவிலுள்ள சில ஆங்கிலேயர்கள் கூட இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு இந்த ஜமாஅத்தில் இணைந்தனர். எந்த அளவு கூட்டம் கூட்டமாக மக்கள் காதியானுக்கு வந்தனர் என்றால், குதிரை வண்டிகள் அதிகமானதன் காரணமாக பல இடங்களிலும் காதியானின் சாலைகள் உடைந்து விட்டன. இந்த முன்னறிவிப்பை நன்றாக சிந்தனை செய்ய வேண்டும். மிகவும் கவனத்துடன் சிந்தனை செய்ய வேண்டும். இது

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

அல்லாஹ் நீதியின் உயர் தரத்தை நிலை நாட்டுவது தொடர்பாக முஸ்லிம்களுக்கு வழிகாட்டியிருப்பது போன்று வேறெந்த மார்க்கத்திலும் அந்த தரம் இடம் பெறவில்லை. ஆனால், துரதிஷ்டவசமாக தற்போது எல்லா மட்டத்திலும் தலைவர்களிலும் ஆலிம்களிலும் ஒரு பெரும் பிரிவினர் நீதி, நேர்மையின் தேட்டங்களுக்கேற்ப முழுமையாக நடப்பதில்லை. அதேபோன்று பொதுவாக முஸ்லிம்களின் குடும்பங்களில் அவர்களது அன்றாட விவகாரங்களில் அல்லாஹ் நிலைநாட்டிய மற்றும் ஒரு நம்பிக்கையாளரிடம் எதிர்பார்க்கப்படும் நீதியின் தரம் தென்படுவதில்லை. குடும்ப சண்டை சச்சரவுகள் இருக்கின்றன. அதில் ஆண்கள் தொடர்பான சம்பவங்களும் உள்ளன. சில நேரங்களில் பெண்கள் சார்பாக நீதிமன்றங்களில் தவறான சாட்சியங்கள் முன்னிலைப்படுத்தப்படுகின்றன. ஆகுமற்ற உரிமைகளைப் பெறுவதற்கு அல்லது ஒருவருடைய உரிமையைப் பறிப்பதற்கு பொய் மற்றும் தவறான கூற்றுக்களைக் கூறுகின்றனர். சுருக்கமாக, ஒரு பெரும் கூட்டத்தினர் தமது உரிமையைப் பெறுவதாகக் கருதிக் கொண்டு அல்லது சிலர் தமக்கு உரிமை இருப்பதாக நினைத்துக் கொண்டு உண்மையுடன் நடப்பதில்லை.

இன்றைய நாட்களில் சமூகத்தில் தோன்றியுள்ள ஏராளமான பிரச்சனைகளுக்கான காரணம் என்னவென்றால் அல்லாஹ் விரும்புகின்ற வகையிலான நீதி மற்றும் நேர்மையின் தரம் மக்களிடம் இல்லை. தமது கூற்றை கூட்டிக் குறைத்துப் பேசுவது சாதாரணமாகி விட்டது. சில நேரங்களில் நம்மிலும் சிலர், உலகமயம் மற்றும் உலகச் சூழலின் தாக்கத்தால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பைஅத்தின் கீழ் வந்த பின்னரும் உண்மையை விட்டு விலகியிருக்கும் கூற்றுகளைப் பேசுகின்றனர். தவறான சாட்சியங்களை கூறுகின்றனர் என்பது வேதனைக்குரிய விஷயமாக இருக்கின்றது.

சில இடங்களில் மார்க்கக் கருத்து வேறுபாடுகள் இருக்கும். அதன் காரணமாக மற்றொரு மார்க்கத்தைச் சார்ந்தவர்கள் அநீதியிழைத்து விடுகின்றனர். எனவே, அதுபோன்ற சூழலில் சமுதாயங்கள் மற்றும் அந்நிய மார்க்கத்தைச் சார்ந்தவர்களிடம் அதேபோன்று நடந்து பழிவாங்குவதும் நீதியின் தேட்டங்களை முழுமை செய்யாமல் இருப்பதும் ஒரு நம்பிக்கையாளருக்கு ஆகுமானதல்ல.

இன்றைய நாட்களில் முஸ்லிம்களின் அநீதிகளைப் பற்றி மேற்கத்திய நாடுகளில் அதிகமாக பேசப்படுகிறது. எந்த மக்கள் தமது சொந்த மதத்தைச் சார்ந்தவர்களிடம் நீதியுடன் நடந்து கொள்வதில்லையோ அவர்கள் மற்ற சமுதாயத்தினருடன் எவ்வாறு நீதியுடன் நடப்பர் என கேட்கின்றனர். இது மாபெரும் வேதனையாகும். முஸ்லிம்கள் தமது செயல்களின் காரணமாக, இஸ்லாத்திற்கு அவப்பெயர் சேர்க்கின்றனர்.

நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் செய்த பைஅத் உடன்படிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்றால், அன்னாரின் வருகையின் நோக்கத்தை முழுமை செய்ய வேண்டும் என்றால், இஸ்லாத்தின் தூதுச் செய்தியை உலகிற்கு எட்ட வைக்க வேண்டும் என்றால், தப்லீகிற்குரிய உரிமையை வழங்க வேண்டும் என்றால், இந்த வழிமுறைக்கேற்ப அனைத்து உயர் நல்லொழுக்கங்களையும் மேற்கொள்ள வேண்டும். அதுவே இஸ்லாத்தின் போதனையாகும். அதனையே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நமக்கு போதித்துள்ளார்கள். அந்த நல்லொழுக்கங்களை மேற்கொள்ளுமாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் நமக்கு வழிகாட்டியுள்ளார்கள். உண்மை மற்றும் நீதியின் அடிப்படையில் நமது சாட்சியங்கள் இல்லையென்றால், நமது குடும்ப மற்றும் சமூக விவகாரங்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டுதலுக்கேற்ப இல்லையென்றால் எதிரிகளின் மீதான பகைமை மற்றும் காழ்ப்புணர்ச்சியிலிருந்து நமது உள்ளம் தூய்மையானதாக இல்லையென்றால் நமது தப்லீக் உண்மையான நேர்வழியை வழங்கக்கூடிய தப்லீகாக ஒருபோதும் அமையாது.

அல்லாஹ்வின் கட்டளைகளின்படி நமது வாழ்க்கையை அமைத்துக் கொள்பவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக. மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் செய்த பைஅத் உடன்படிக்கையின்படி செயல்படுபவர்களாக நாம் திகழ்வோமாக. மேலும் மற்றவர்களுக்கு நேர்வழி மற்றும் நீதியின் முன்னுதாரணங்களாகத் திகழ்வோமாக.

ரப்வாவைச் சார்ந்த முன்னாள் துணை வகீலுத் தஃப்ஸீரான மதிப்பிற்குரிய ஹஸன் முஹம்மது கான் ஆரிஃப் சாஹிப் அவர்கள் கனடாவில் வஃபாத் ஆகி விட்டார்கள். மர்ஹூமின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அவர்களுக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்** **10 நவம்பர் 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **நுபுவ்வத்** மாதம் **10 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ.
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ ـ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ.
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ. اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. اِيَّاكَ نَعْبُدُ
وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.

அல்லாஹ் நீதியின் உயர் தரத்தை நிலை நாட்டுவது தொடர்பாக முஸ்லிம்களுக்கு வழிகாட்டியிருப்பது போன்று வேறெந்த மார்க்கத்திலும் அந்த தரம் இடம் பெறவில்லை. ஆனால், துரதிஷ்டவசமாக தற்போது எல்லா மட்டத்திலும் தலைவர்களிலும் ஆலிம்களிலும் ஒரு பெரும் பிரிவினர் நீதி, நேர்மையின் தேட்டங்களுக்கேற்ப முழுமையாக நடப்பதில்லை. அதேபோன்று பொதுவாக முஸ்லிம்களின் குடும்பங்களில் அவர்களது அன்றாட விவகாரங்களில் அல்லாஹ் நிலைநாட்டியதும், ஒரு நம்பிக்கையாளரிடம் எதிர்பார்க்கப்படுகின்றதுமான நீதியின் தரம் தென்படுவதில்லை. குடும்ப சண்டை சச்சரவுகள் இருக்கின்றன. அதில் ஆண்கள் தொடர்பான சம்பவங்களும் உள்ளன. சில நேரங்களில் பெண்கள் சார்பாக நீதிமன்றங்களில் தவறான சாட்சியங்கள் முன்னிலைப்படுத்தப்படுகின்றன. ஆகாத உரிமைகளைப் பெறுவதற்கு அல்லது ஒருவருடைய உரிமையைப் பறிப்பதற்கு பொய் மற்றும் தவறான கூற்றுக்களைக் கூறுகின்றனர்.

சுருக்கமாக, ஒரு பெரும் கூட்டத்தினர் தமது உரிமையைப் பெறுவதாகக் கருதிக் கொண்டு அல்லது சிலர் தமக்கு உரிமை இருப்பதாக நினைத்துக் கொண்டு உண்மையுடன் நடப்பதில்லை அல்லது பிறரின் உரிமையைப் பறிப்பதற்காக பொய் பேசி நீதிமன்றத்தையும் ஏமாற்றி விடுகின்றனர். சில இடங்களில் நீதி தீர்ப்பவர்கள் சுயநலத்திற்காக தவறான தீர்ப்பு வழங்கி விடுகின்றனர். ஆக, அமைப்பே சீர்கெட்டு விட்டதற்கான தோற்றம் உருவாகி விடுகின்றது.

எவ்வாறிருப்பினும், இந்த அநீதியின் காரணமாக சமூகத்தில் தீமைகள் பரவிக் கொண்டே செல்கின்றன. அடுத்து தேசிய அளவில் ஆட்சியாளர்கள் நீதியின் தேட்டத்தை முழுமை செய்வதில்லை. தமது குடிமக்களுடனும் நீதியின் எதிர்பார்ப்புகளை முழுமை செய்வதில்லை.

இரண்டு நாடுகளுக்கிடையிலான பரஸ்பர உறவுகளின் விவகாரங்களிலும் நீதியின் எதிர்பார்ப்புகளை அவர்கள் முழுமை செய்வதில்லை. ஆலிம்களை எடுத்துக் கொண்டால் சுய நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறையாக மார்க்கத்தை அவர்கள் ஆக்கிக் கொண்டனர். ஆனால், நாங்களோ சிறந்த சமுதாயம் என்றும், இஸ்லாம் மட்டுமே உலகப் பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்குவதாகவும் முஸ்லிம்கள் வாதிக்கின்றனர். நிச்சயமாக முஸ்லிம்கள் சிறந்த சமுதாயம்தான்; அதில் சந்தேகமில்லை. ஆனால், அவர்கள் அல்லாஹ்வின் கட்டளையின்படி நடந்து, திருக்குர்ஆனின் தூய போதனையின்படி செயலாற்றும்போதுதான் அவர்கள் சிறந்த சமுதாயமாக இருக்க முடியும். நிச்சயமாக உலகப் பிரச்சனைகள் அனைத்திற்குமான தீர்ப்பை திருக்குர்ஆன் மட்டுமே முன் வைக்கிறது. அதில் சந்தேகமில்லை. ஆனால் நிபந்தனை என்னவென்றால், அதன் போதனைகளுக்கேற்ப உண்மை மற்றும் நீதியின் தரம் நிலைநாட்டப்படுதல் வேண்டும்.

அந்நிஸா, அல்மாயிதா மற்றும் அல் அஃராஃப் என நான் துவக்கத்தில் மூன்று பல்வேறு அதிகாரங்களிலிருந்து மூன்று வசனங்களை ஓதினேன். முதலில் அந்நிஸாவின் வசனம் ஓதப்பட்டது.

அதன் பொருள்: நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வுக்காக சாட்சிகளாகத் திகழ்ந்து நீதியை உறுதியுடன் நிலைநாட்டக் கூடியவர்களாக ஆகி விடுங்கள். உங்களுக்கு எதிராகவே சாட்சியம் கூற நேரிட்டாலும் சரியே! செல்வந்தராகவோ ஏழையாகவோ இருந்தாலும் சரியே! இருவரையும் அல்லாஹ்வே சிறந்த முறையில் கண்காணிப்பவன் ஆவான். எனவே, உங்களது மன இச்சைகளைப் பின்பற்றாதீர்கள். அநீதியிழைப்பதிலிருந்து விலகி விடுங்கள். நீங்கள் சுற்றி வளைத்துப் பேசினால் அல்லது ஒருதலைப்பட்சமாக செயல்பட்டால் நிச்சயமாக நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கறிகின்றான்.

ஆக, இவை நீதியின் தரத்தை நிலை நாட்டுவதற்கான கட்டளைகளாகும். தனிப்பட்ட குடும்ப விவகாரங்களிலும் சரி, சமூக விவகாரங்களிலும் சரி, எப்படிப்பட்ட சூழல் உருவானாலும் நீதி நேர்மையில் எப்போதும் நிலைநிற்க வேண்டும். இது நம்பிக்கையாளர் –களுக்கு இடப்பட்ட கட்டளையாகும். அல்லாஹ் –வுக்காக, அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப நம்பிக்கையாளர்களின் சாட்சி அமைய வேண்டும். அல்லாஹ்வின் மீது முழுமையான ஈமான் இருக்கும்போதும், ஈமானின் தரம் மிக உயர்தரத்தில் இருக்கும்போதும்தான் இந்நிலை உருவாக முடியும். என் மீது என்ன சூழல்கள் வந்தாலும் நான் உறுதியுடன் நீதியில் நிலை நிற்பேன் என்ற விஷயத்தில் மனிதன் உறுதியாக இருக்க வேண்டும். மனிதன் தனக்கு எதிராகவும் சாட்சி கூறத் தயாராகும்போதே அந்நிலை உருவாகும். தனக்கெதிராக சாட்சி கூறக்கூட ஒருவர் தயாராகி விடும் போது அவரது உறுதிப்பாடும் தெரிய வரும். தேவை ஏற்பட்டால் தமது மனைவி மக்களுக்கு எதிராகவும், பெற்றோருக்கு எதிராகவும் சாட்சி கூறத் தயாராகி விட வேண்டும்.

அல்லாஹ் கூறுகின்றான்: மன இச்சைகளைப் பின்பற்றுதல் மனிதனை நீதியை விட்டு அகற்றி விடுகின்றது. உங்கள் மனயிச்சைகள் துவங்கி விட்டால் நீங்கள் நீதி, நேர்மையை விட்டு விலகி விடுவீர்கள். இன்றைய நாட்களில் சமூகத்தில் தோன்றியுள்ள ஏராளமான பிரச்சனைகளுக்கான காரணம் என்னவென்றால் அல்லாஹ் விரும்புகின்ற வகையிலான நீதி மற்றும் நேர்மையின் தரம் மக்களிடம் இல்லை. தமது கூற்றை கூட்டிக் குறைத்துப் பேசுவது சாதாரணமாகி விட்டது. சில நேரங்களில் நம்மிலும் சிலர், உலகமயம் மற்றும் உலகச் சூழலின் தாக்கத்தால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பைஅத்தின் கீழ் வந்த பின்னரும் உண்மையை விட்டு விலகியிருக்கும் கூற்றுகளைப் பேசுகின்றனர். தவறான சாட்சியங்களை கூறுகின்றனர் என்பது வேதனைக்குரிய விஷயமாக இருக்கின்றது.

அல்லாஹ் கூறுகின்றான்: உங்களுக்கு தனிப்பட்ட அளவிலோ அல்லது பெற்றோர் –களுக்கோ பாதிப்பு ஏற்பட்டாலும், நீங்கள் உண்மைக்கு மாற்றமான விஷயங்களைப் பேசாதீர்கள் அல்லது உண்மையை மறைப்பதற்கு ஒருதலைப்பட்சமாக நடந்தவாறு தப்பிப்பதற்கு முயற்சி செய்யப்பட்டுள்ளது என்ற தாக்கத்தை ஏற்படுத்தி விடாதீர்கள்.

இதனை நாம் அன்றாட விவகாரங்களில் பார்க்கின்றோம். உதாரணமாக, கணவன் மனைவி விவகாரங்கள் உள்ளன. கஸாவில் இதுபோன்ற நிறைய விவகாரங்கள் வருகின்றன. அதில் உண்மை மேற்கொள்ளப்படுவதில்லை. கொடுக்கல் வாங்கல் விவகாரம் உள்ளது. அதில் உண்மை மறைக்கப்படுவதை நாம் பார்க்கின்றோம். இப்படிப்பட்ட விஷயங்களை பேச முடியுமா? என்று நாம் வேதனைப்படும் அளவிற்கு மார்க்க அறிவு படைத்த மற்றும் மார்க்கத் தொண்டுகளில் முன்னிலையில் இருக்கக்கூடிய சிலர் கூட சில விஷயங்களைப் பேசி விடுகின்றனர். அவர்கள் வெளிப்படையில் மார்க்க அறிவு படைத்த பெரிய ஆலிமாக இருக்கின்றனர். அவர்களைப் பற்றிய நல்ல தாக்கமும் சமூகத்தில் இருக்கின்றது.

அல்லாஹ் கூறுகின்றான்: உங்களுக்கு எதிராகவோ உங்கள் பெற்றோருக்கெதிராகவோ தமது நெருங்கிய இரத்த உறவினர்களுக்கு எதிராகவோ இருப்பினும் உண்மையை மறைக்காதீர்கள். எல்லா நிலையிலும் உண்மையை வெளிப்படுத்துங்கள். இந்த மக்கள் நட்பு பாராட்டுவதற்காக அல்லது சுயநலனுக்காக உண்மையை மறைக்கின்றனர். சுற்றி வளைத்துப் பேசுகின்றனர். மேலும், தமது விஷயங்களுக்கு ஆதரவாகப் பேசுவதற்கு போதுமான ஆயத்தங்களையும் செய்கின்றனர். இந்த உண்மை வெளிப்பட்டு விட்டால் அதிலிருந்து எப்படி தப்பிக்க வேண்டும்? அல்லது என்னென்ன சான்றுகளை மறுப்பதற்கு கொடுக்க வேண்டும் என முன்னேற்பாடுகள் செய்து கொள்கின்றனர்.

ஆனால், எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும். நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கு அறிந்தவன் ஆவான். அல்லாஹ்வை எவரும் ஏமாற்ற முடியாது. இவ்வுலக ஆதாயங்களை ஒருவேளை நீங்கள் பெறக்கூடும். இவ்வுலகில் ஒருவேளை அல்லாஹ்வின் பிடியிலிருந்து தப்பித்து விட்டாலும் கூட மறுமையில் அவர்கள் மனதின் சொந்த விஷயங்களால் பிடிக்கப்படுவார்கள் என அல்லாஹ் கூறுகின்றான். நமது அனைத்து செயல்களையும் நன்கு அறிந்த அல்லாஹ் நம்முன் நமது செயலறிக்கையினை வைத்து விடுவான். அதில் அனைத்து விஷயங்களும் வந்து விடும். நாம் ஏற்றுக் கொண்ட இமாம் அவர்கள் திருக்குர்ஆனின் போதனையின்படி செயல்பட்டவாறு அந்நியர்கள் கூட ஆச்சரியப்படத்தக்க வகையில் முன்மாதிரி –களை நிலைநாட்டியுள்ளார்கள்.

ஒரு முறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாதத்திற்கு மிக முந்தைய காலத்தில் இளமைப் பருவத்தில் அன்னாரின் சம்பவம் ஒன்று வரலாற்றுப் புத்தகத்தில் வருகின்றது. அன்னார் தனது தந்தையின் உறவினர்களுக்கு எதிரான வழக்கு ஒன்றிற்காக நீதிமன்றத்தில் ஆஜர் ஆனார்கள். நீதி மற்றும் நேர்மைக்கான எதிர்ப்பார்ப்புகளை நிறைவேற்றியவாறு உண்மையைப் பேசினார்கள். அதன் விளைவாக எதிர் தரப்பிற்கு பயன் கிடைத்தது. அன்னாரின் தந்தைக்கு பாதிப்பு ஏற்பட்டது. தான் கூறியவாறு சாட்சி கூறவில்லை என்றால் பாதிப்பு ஏற்படும் என வக்கீல் முன்னரே கூறியிருந்தார். அதற்கு எது நடந்தாலும் சரி, எது உண்மையோ அதனையே நான் கூறுவேன் என்று அன்னார் கூறினார்கள்.

எவ்வாறிருப்பினும், நீதிபதி எதிர் தரப்பிற்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கினார். அந்த வழக்கில் அன்னாருக்கு எதிராக தீர்ப்பு வந்ததும், பார்த்தவர்கள் கூறுகின்றனர். தீர்ப்பிற்குப் பிறகு நீதிமன்றத்திலிருந்து மிக மகிழ்ச்சியுடன் அன்னார் வீடு திரும்பினார்கள். எந்த அளவுக்கு என்றால், தீர்ப்பைப் பற்றி அதுவரை கேள்விப்படாத மக்கள் இவர், வழக்கில் வெற்றி பெற்று விட்டு வீடு திரும்புகின்றார் எனக் கருதினார்கள். (தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 1 பக்கம் 72-73, ஆயினயே கமாலாத்தே இஸ்லாம். ரூஹானீ கஸாயின் தொகுதி 5 பக்கம் 296)

எனவே, நாம் ஏற்றுக் கொண்ட ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரின் முன்னுதாரணம் இதுவேயாகும். மேலும் இந்த முன்னுதாரணத்தை முன்னிறுத்தி நமது சாட்சியங்களின் நிலைகளை எப்போதும் நாம் ஆய்வு செய்ய வேண்டும். அதேபோன்று பல விவகாரங்கள் உள்ளன. அவற்றில் இந்த மேற்கத்திய நாடுகளில் சிலர் தமது வருமானத்தைக் குறைத்துக் காட்டி வரி செலுத்துவதிலிருந்து தப்பிக்கின்றனர் அல்லது அரசாங்கத்திடமிருந்து சில பொருளாதார உதவிகளைப் பெற்றுக் கொள்கின்றனர். ஆனால், தற்போது உலகத்தின் பொருளாதார சூழல் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த முன்னேற்றம் அடைந்த நாடுகள் இவ்விஷயங்களை மிக ஆழமாகச் சென்று ஆய்வு செய்யத் தொடங்கி விட்டன. எங்கு அவர்களுக்கு சந்தேகம் வந்தாலும் உடனடியாக விசாரனை மேற்கொள்கின்றனர். எனவே, அஹ்மதிகள் தமக்கும், ஜமாஅத்திற்கும்

அவப்பெயர் சேர்ப்பதிலிருந்து தப்பித்தவாறும் இறைவழியில் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறும் பொருட்டு உலகியல் பாதிப்புகளைச் சகித்துக் கொள்ள வேண்டும். உண்மையை ஒருபோதும் மறைக்கக் கூடாது. எப்போதும் உண்மையான விஷயங்களையே பேச வேண்டும். நிய்யத் நல்லதாக இருந்தால் அல்லாஹ்வுக்காக மட்டுமே சாட்சியமளித்து நீதியை உறுதியுடன் பற்றிப் பிடித்துக் கொண்டால், தமது சாட்சியத்தின் தரத்தை நேரான கூற்றுகளின் அடிப்படையாக அமைத்துக் கொண்டால் 'ரப்' மற்றும் 'ராஸிக்' எனும் உணவளிப்பவனாகிய அல்லாஹ்வே அடியாருக்கு உகந்த சூழலையும் ரிஸ்கையும் உருவாக்கி விடுவான்.

எனவே, நாம் எப்போதும் நம்மை ஆய்வு செய்து கொண்டே இருக்க வேண்டும். நாம் இதுபோன்ற நீதியின் தரத்தை நிறைவேற்ற –வில்லை என்றால் குடும்பத்திலும் நிம்மதியும், அமைதியும் நிலை நிற்க முடியாது. நாம் வசிக்கும் பகுதி அல்லது சமூகத்தின் அமைதியும் நிலை நிற்க முடியாது. இதன்படி செயல்படாததன் விளைவாக ஜமாஅத் உறுப்பினர்களின் பரஸ்பர உறவுகளில் பெரும் விரிசல் ஏற்படும். சிலர் தவறான கூற்றுகள் மற்றும் அநீதிகளில் எந்த அளவிற்கு முன்னேறி விடுகின்றனர் என்றால் அவர்களைக் கண்டு ஆச்சரியம் ஏற்படுகின்றது. சில பெண் பிள்ளைகளின் பெற்றோர்கள் என்னிடம் புகார் செய்துள்ளனர். எங்களுடைய மகளின் திருமண பந்தம் ஓரிடத்தில் முறிந்து விட்ட பிறகு மாப்பிள்ளை வீட்டார் நாங்கள் திருமணம் பேசி வந்த மற்ற இடங்களுக்குச் சென்று பொய் மற்றும் தவறான கூற்றுகளைக் கூறி பெண்ணை அவமானப்படுத்து –கின்றனர் என்று அவர்கள் கூறுகின்றனர். இதே போன்று சில பையன்களும் என்னிடம் வந்தார்கள். அவர்களுக்கு எதிராக பெண் வீட்டார் தவறான மற்றும் பொய் சாட்சியங்களைக் கூறி திருமண பந்தங்களை முறித்து விடுகின்றனர். அல்லது அந்த உறவுகளில் விரிசல் ஏற்படுத்த முயற்சி செய்யப்படுகின்றது என்று அவர்கள் என்னிடம் தெரிவித்தனர். இது மிக அபாயகரமான விஷயம் ஆகும். இது சமூக அமைதியை சீர்கெடுக்கும் காரியமாகும். மேலும் தமது உடன்படிக்கைகளை முறிக்கின்ற காரியமாகும். அல்லாஹ்வின் கட்டளைகளிலிருந்து விலகி செல்கின்ற காரியமாகும்.

நமக்கு காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்ளும் பாக்கியம் வழங்கி அல்லாஹ் நம்மீது கருணை புரிந்துள்ளான். நாம் ஒருவருக்கொருவர் சகோதரர்களாக திகழ அல்லாஹ் ஏற்பாடு செய்துள்ளான். அவ்வாறிருக்க நாமே, நமது சுய நலனுக்காக அல்லது தனது 'நான்' என்ற அகந்தையில் தன்னை திருப்திப்படுத்திக் கொள்ள அல்லது ஒருவர் மற்றவருக்கெதிராக பகைமையையும் காழ்ப்புணர்ச்சியையும் சுமந்தவாறு பழிவாங்க முயற்சி செய்கின்றோம். மேலும், பழிவாங்குவதற்காக எந்த அளவிற்குச் சென்று விடுகின்றோம் என்றால், இறையச்சத்தை உள்ளத்திலிருந்து வெளியேற்றி விடுகிறோம். ஒருவர் தம்மீது அநீதியிழைக்கப்பட்டதாகக் கருதினால் கூட விஷயம் முடிவிற்கு வந்து விட்ட பிறகு அநீதியிழைத்தவரை விட்டு விலகி விட வேண்டும். எல்லா விஷயங்களையும் நன்கு அறிந்த அல்லாஹ்விடம் அந்த விஷயத்தை ஒப்படைத்து விடுங்கள். அதுபோன்ற நிலையில் அல்லாஹ்விடம் விவகாரத்தை ஒப்படைத்து விடுவதே ஒரு நம்பிக்கையாளரின் நற்பாக்கியம் ஆகும்.

அடுத்து, தனது சமூகத்தில் நீதி மற்றும் நேர்மையை நிலைநாட்டுவது தொடர்பாக அல்லாஹ் நம்பிக்கையாளர்களுக்கு இவ்வாறு கட்டளை வழங்கியுள்ளான். அதாவது, தமது சொந்த சமூக விவகாரங்களைக் கடந்து உயர் தரமான நீதியின் முன்னுதாரணங்களை நிலைநாட்டுவது உங்களின் கடமையாகும் என அல்லாஹ் கூறியுள்ளான். அந்நிய சமுதாயத்திடம் கூட நீதியுடன் நடந்தவாறு அதன் உயர் தரத்தை வெளிப்படுத்த வேண்டும். எதிரிகளிடம் கூட நீங்கள் நீதி மற்றும் நேர்மையின் தரத்தை நிலைநாட்டவில்லை என்றால் நீங்கள் இறையச்சத்தின் வழியில் நடப்பவர்கள் அல்ல என கருதப்படும்.

சூரா அல்மாயிதாவின் 9 –வது வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான். நான் ஓதிய வசனத்தில் பொருள் இதுவாகும். அல்லாஹ் கூறுகின்றான்: நம்பிக்கை கொண்ட மக்களே! அல்லாஹ்வுக்காக உறுதியாக கண்காணித்தவாறு நீதிக்கு ஆதரவாக சாட்சியம் அளியுங்கள். எந்தவொரு சமுதாயத்தின் மீதும் கொண்ட பகைமையும் உங்களை நீதியுடன் நடக்காதிருக்கத் தூண்ட வேண்டாம். நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். இது இறையச்சத்திற்கு மிக நெருங்கிய விஷயமாகும். மேலும் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கு அறிந்தவனாக இருக்கின்றான்.

சில இடங்களில் மார்க்கக் கருத்து வேறுபாடுகள் இருக்கும். அதன் காரணமாக மற்றொரு மார்க்கத்தைச் சார்ந்தவர்கள் அநீதியிழைத்து விடுகின்றனர். எனவே, அதுபோன்ற சூழலில் சமுதாயங்கள் மற்றும் அந்நிய மார்க்கத்தைச் சார்ந்தவர்களிடம் அதேபோன்று நடந்து பழிவாங்குவதும் நீதியின் தேட்டங்களை முழுமை செய்யாமல் இருப்பதும் ஒரு நம்பிக்கையாளருக்கு ஆகுமானதல்ல.

ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஒரு தர்ஸின்போது இவ்வாறு கூறினார்கள்: அக்காலத்தில் ஆரியர்கள் முஸ்லிம் ஊழியர்களுக்கு தொல்லை கொடுத்து வந்தனர் அல்லது வேலையைவிட்டு வெளியேற்றி வந்தனர். அவர்கள் அவ்வாறு செய்தாலும் கூட அவர்களிடம் பழி வாங்குவது ஒரு முஸ்லிமின் பணியல்ல. அப்போதுதான் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப செயல்பட முடியும். (ஹகாயிகுல் ஃபுர்கான் தொகுதி 2 பக்கம் 85 த.ஃப்ஸீர் சூரா மாயிதா வசனம் 9) நீதியினை நிலைநாட்டாமல் இருப்பது ஒரு முஃமினின் பணியல்ல. ஒரு நம்பிக்கையாளரின் பணி என்னவென்றால் நீதியினை நிலைநாட்ட வேண்டும். இறையச்சத்தை மேற்கொள்ள வேண்டும். மேலும் தனது விவகாரத்தை அல்லாஹ்விடம் ஒப்படைத்து விட வேண்டும். அவன் அனைத்து விவகாரங்களையும் நன்கு அறிந்தவன் ஆவான்.

ஓர் உண்மையான நம்பிக்கையாளரின் பணி என்னவென்றால், அல்லாஹ்வின் கட்டளைகளை உறுதியுடன் பற்றிப் பிடித்து அதில் நிலை நிற்க வேண்டும். அதில் அணு அளவு கூட கவனக்குறைவு இருத்தல் கூடாது. ஓர் உண்மையான முஸ்லிமின் ஒவ்வொரு கூற்றும், செயலும் அல்லாஹ்வுக்காகவே இருத்தல் அவசியமாகும். இதுவே ஓர் உண்மையான நம்பிக்கையாளரின் அடையாளம் ஆகும். நீதிக்கு ஆதரவாக சாட்சியாகத் திகழ்வது, மக்களுக்கும் மற்ற மார்க்கத்தைச் சார்ந்தவர்களுக்கும் சமூகத்திற்கும் உதாரணமாக இருக்கும் வகையில் இஸ்லாமிய போதனைகளின்படி உங்கள் செயல்கள் இருக்க வேண்டும்.

இன்றைய நாட்களில் முஸ்லிம்களின் அநீதிகளைப் பற்றி மேற்கத்திய நாடுகளில் அதிகமாக பேசப்படுகிறது. எந்த மக்கள் தமது சொந்த மதத்தைச் சார்ந்தவர்களிடம் நீதியுடன் நடந்து கொள்வதில்லையோ அவர்கள் மற்ற சமுதாயத்தினருடன் எவ்வாறு நீதியுடன் நடப்பர் என கேட்கின்றனர். இது மாபெரும் வேதனையாகும். முஸ்லிம்கள் தமது செயல்களின் காரணமாக, இஸ்லாத்திற்கு அவப்பெயர் சேர்க்கின்றனர். ஆட்சியாளர்கள் குடிமக்களின் உரிமைகளைப் பறிக்கின்றனர். பொதுமக்கள் ஆட்சிக்கும் ஆட்சியாளர்களுக்கும் எதிராக சண்டையிடுகின்றனர். பெரும் பெரும் குடியிருப்புகள் அநீதிக்கு இலக்காகி அழிந்து

M. Abdul Raoof
✆ +91 9362 2272 29
SUCCESS INDIA
PROMOTERS
Coimbatore, Tamil Nadu
Mob : +91 9363 2272 27
Email: successraoof@gmail.com

A.M. Zakir Hussain
✆ +91 98429 41237
METAPLAST
DEALERS IN ALL KIND OF PLASTIC RAW MATERIAL & SCRAP
# 70-A, M.S. Nagar, Kurichi Pirivu,
Podanur Main Road, Coimbatore - 641023.
Ph : +91 422-2411124 Mob : 9364218000
Email : zakir@yahoo.com

Bamboo Village
MULTI CUISINE
RESTAURANT
Village Jn. Cherani, Manjeri, Malappuram Dt., Kerala
✆ 0483 276 77 96, 7592 911 164, 9048 774 811
9605 993 444, 9605 995 222
Email : www.q4qcaterers.com

விடுகின்றன. பெயர் தாங்கி இஸ்லாமிய அமைப்புகள் சொந்த மக்களையே கொலை செய்கின்றனர். அந்நிய நாடுகளிலும், இங்கு வந்தும் கூட அக்கிரமான செயல்களை அவர்கள் செய்கின்றனர். மேற்கத்திய மக்களாகிய இவர்கள் எங்கள் மக்களை கொலை செய்கின்றனர். எனவே, நாங்களும் எங்களது உரிமையைப் பயன்படுத்துகிறோம் என்று கூறி தங்களின் அநீதிகளை நியாயப்படுத்துகின்றனர்.

ஆனால், உண்மையில் முஸ்லிம்களை முஸ்லிம்கள்தான் கொலை செய்கின்றனர். அதற்கு அந்நியர்களிடம் நிச்சயம் உதவி பெறுகின்றனர். அதில் எந்த சந்தேகமுமில்லை. கடந்த நாட்களில் இந்த தீவிரவாத குழுக்களின் புதிய சதித்திட்டம் நம்முன் வந்துள்ளது. பல்வேறு நாடுகளின் நகரங்களில் அவ்வப்போது இவர்கள் தாக்குதல் நடத்தியும் வருகின்றனர். இனி, ஐரோப்பாவில் நாங்கள் குழந்தைகள் மீது தாக்குதல் நடத்துவோம். பெற்றோர்களுக்கு முன்னால் அவர்களின் பிள்ளைகளைக் கொல்லுவோம். ஏனென்றால், இந்த மேற்கத்திய நாடுகளின் விமானங்கள்தான் குண்டுகள் வீசி எங்களது பிள்ளைகளைக் கொன்று எங்கள் குடியிருப்புகளை அழித்து விட்டன என்று கூறி தங்களது அநீதியை நியாயப்படுத்துகின்றனர். உண்மையில் சொல்லப்போனால், முஸ்லிம் ஆட்சியாளர்கள் கூறியதன் விளைவாகவே அந்த குண்டுகள் வீசப்பட்டன. எப்படியிருப்பினும் இப்படிப்பட்ட ஒரு சமுதாயத்தின் மீதான பகைமை மேலும் எதிர்காலத்தில் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. பின்னர் ஒருபோதும் அந்த தொடர் முற்றுப் பெறுவதில்லை.

எனவேதான் அல்லாஹ் கூறினான்: எந்த ஒரு சமுதாயத்தின் மீதான பகைமையும் உங்களை நீதியின் எதிர்ப்பார்ப்புகளை முழுமை செய்யாத வண்ணம் இருக்க நிர்பந்திக்க கூடாது. நீங்கள் நீதியின் தேட்டங்களை எல்லா நிலையிலும் நிறைவேற்ற வேண்டும். நீதியின் தேட்டங்கள் நிறைவேற்றப்படாததன் விளைவாகவே அநீதிகளும் அதிகரித்து வருகின்றன. மேலும், முஸ்லிம் அல்லாதவர்கள் இருக்கின்றனர் என்றால் அதற்கும் காரணம் முஸ்லிம்களின் செயல் முன்மாதிரி மூலமாக முஸ்லிம்கள் இஸ்லாத்தின் போதனைகளை உலகிற்குக் காட்டி இஸ்லாத்தை பிரச்சாரம் செய்திருக்க வேண்டும். ஆனால் இங்கு நிலைமை தலைகீழாக உள்ளது. அநீதிகளை தவிர்த்து முஸ்லிம்களிடம் வேறெதுவும் கிடைப்பதேயில்லை. இஸ்லாத்திற்கு ஆதரவான சாட்சியளிப்பது என்பது இஸ்லாத்தின் போதனைகளின் சிறப்பை எடுத்துரைப்பதன் மூலமே சாத்தியம் ஆகும்.

திருக்குர்ஆனின் போதனை எவ்வளவு அழகியது என்று பாருங்கள்: எந்தவொரு சமுதாயத்தின் மீதான பகைமையும் நீங்கள் நீதியுடன் நடக்காமல் இருக்குமாறு தூண்ட வேண்டாம். இந்த கட்டளை வேறெந்த மார்க்க வேதங்களிலும் தரப்படவில்லை. நீதியை நிலைநாட்டுவதில் எந்த பாராபட்சமும் கிடையாது. நீதியை பெறுவதற்கான உரிமை முஸ்லிம், முஸ்லிம் அல்லாதவர் இருவருக்கும் சமமானதாகும். இன்னும் சொல்லப்போனால், எதிரிகளுடன் கூட நீதியின் தேட்டங்களை முழுமை செய்தவாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது போதனையாகும். இதன் பக்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும். எவ்வளவு அழகிய போதனை பாருங்கள்! ஆனால் வேதனை என்னவென்றால், இவ்வாறான போதனைகள் இருந்தபோதிலும் முஸ்லிம்களின் செயல்கள் முஸ்லிம் அல்லாத உலகில் இஸ்லாத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்தி விடுகின்றது.

பொதுவாக, முஸ்லிம் ஆலிம்கள், ஆட்சியாளர்கள் அனைவரும் இந்த செயல்களைச் செய்து வருகின்றனர். இவர்களின் இந்த செயல்கள் நம் மீது இந்த பொறுப்பைச் சுமத்துகின்றன. நாம் நமது செயல் முன்மாதிரிகளின் மூலமாக இஸ்லாம் எந்த அளவுக்கு நீதி மற்றும் நேர்மையைப் போதிக்கின்றது என்பதை எடுத்துரைக்க வேண்டும். உலகில் அமைதியும், நிம்மதியும் அதன் மூலமே நிலைபெற முடியும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எந்த அளவுக்கு நுட்பமாக சஹாபாக்களை அதன்படி செயல்பட வைத்தார்கள் என்பதற்கு நான் சில உதாரணங்களைத் தருகிறேன்.


ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒருமுறை எதிரிகளின் செய்திகளை அறிந்து வர சில சஹாபாக்களை மக்காவிற்கு அனுப்பி வைத்தார்கள். அப்போது முஸ்லிம்களின் நிலை மிக அபாயகரமானதாக இருந்தது. எதிரிகளின் தாக்குதல் மற்றும் பாதிப்பை ஏற்படுத்துவதற்கான அபாயம் எப்போதும் இருந்து வந்தது. அதுபோன்ற சமயத்தில் இந்த சஹாபாக்கள் செய்தி சேகரிக்கச் சென்ற போது, ஹரமிற்கு உட்பட்ட இடத்தில் அவர்களை சில காஃபிர்கள் பார்த்து விட்டனர். இவர்கள் நம்மை பார்த்து விட்டனர். நாம் இவர்களை உயிருடன் விட்டு விட்டால் மக்காவாசிகளுக்கு இவர்கள் தகவல் கொடுத்து விடுவர். அதனால் அவர்கள் நம்மீது தாக்குதல் நடத்தி நம்மைக் கொன்று விடுவார்கள் என சஹாபாக்கள் எண்ணி, காஃபிர்கள் மீது தாக்குதல் நடத்தி அவர்களில் ஒருவர் அல்லது இருவரைக் கொன்று விட்டனர். இந்த சஹாபாக்கள் மதீனா திரும்பியவுடன் மக்காவாசிகளும் முறையீடு செய்ய பின்னால் வந்தனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வந்து உங்களது ஆட்கள் எமது ஆட்களை கொன்று விட்டனர். ஹரமிற்கு உட்பட்ட பகுதியில் கொன்றுள்ளனர் என முறையிட்டனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவர்களின் முறையீட்டைக் கேட்டு விட்டு, நீங்களும்தானே அநீதியிழைத்து வந்தீர்கள். இப்போது அதேபோன்று நடந்து கொள்ளப்பட்டதால் ஏன் இப்படி கூப்பாடு போடுகின்றீர்கள்? என்று கேட்கவில்லை. மாறாக, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்தார்கள். உங்களுடன் தவறாக நடந்து கொள்ளப்பட்டுள்ளது; அநீதியிழைக்கப் –பட்டுள்ளது என்றே அவர்களுக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள்.

ஹரமிற்கு உட்பட்ட இடத்தில் சம்பவம் நடந்துள்ளதால் காஃபிர்கள் முழுமையாக தங்களை தற்காத்துக் கொள்ள இயலாமல் இருந்திருக்க வாய்ப்புள்ளது. எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அரபிகளின் வழக்கத்திற்கேற்ப கொலை செய்யப்பட்ட இரண்டு நபர்களின் குடும்பத்திற்கு உரிய நிவாரணம் வழங்கப்படும் என்று கூறி அந்த நிவாரணத் தொகையையும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கொடுத்தார்கள். அத்துடன் நீங்கள் ஏன் இவ்வாறு தவறாக நடந்து கொண்டீர்கள்? என சஹாபாக்களையும் கண்டித்தார்கள். (ஷரஹ் ஸுர்கானி அலி மவாஹிபுல் லத்துன்யா தொகுதி 2 பக்கம் 238-241. சரியா அமீருல் மு.ஃமினீன அப்துல்லாஹ் பின் ஜெஹஸ் பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் 1996 -ல் அச்சிடப்பட்டது)

அதேபோன்று இன்னொரு சம்பவம் வருகின்றது: ஒரு சஹாபி தவறுதலாக ஒரு பெண்ணை போரில் கொன்று விட்டார்கள். இது பற்றி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு தெரிய வந்தது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அந்த சஹாபியின் மீது மிகவும் வேதனை அடைந்தார்கள். அறிவிப்பில் வருகின்றது: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முகத்தில் கோபத்தின் அடையாளங்கள் தென்பட்டன. அதுபோன்ற நிலையை அதற்கு முன் அன்னாரிடம் கண்டதில்லை. ஹுஸூர்! தவறுதலாக சம்பவம் நடந்து விட்டது என்று அந்த சஹாபி கூறினார். தவறுதலாக அந்த பெண் கொலை செய்யப்பட்டிருந்த போதிலும் நீதி நிலைநாட்டப்பட –வில்லையே என ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steal Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

ALIF AUTO CARE
Pudupet, Chennai.
Ph: 98847 74525

CITY HARDWARE STORE'S
Chrompet, Chennai - 600 044.
Ph : 044-22655219

ரஹ்மானியா
மேல்நிலைப் பள்ளி
தொடக்கப் பள்ளி
மெட்ரிகுலேஷன் பள்ளி
மேலப்பாளையம், திருநெல்வேலி.
S.S. அஸன் அபூபக்கர்
✆ 94869 37769

மிகவும் வேதனை ஏற்பட்டது. (சஹீஹ் புகாரி கிதாபுல் ஜிஹாதி வஸ்ஸய்ர் பாபு கத்லுஸ்ஸி ஃப்யானி ஃபில் அரப் 3014. அல் அய்மா மாலி ஸவாயுதுல் அமாலி வல் அஜ்ஸா தொகுதி 2 பக்கம் 543 ஹதீஸ் எண் 1860)

அடுத்து, நீதியை நிலைநாட்டியவாறு ஒரு யூதர் மற்றும் ஒரு முஸ்லிம் இருவருக்கு இடையேயான விவகாரத்தில் எவ்வாறு அன்னார் தீர்ப்பு வழங்கினார்கள் என்று பார்ப்போம். அறிவிப்பில் வருகின்றது: ஒரு முஸ்லிம் சஹாபி ஒரு யூதரிடம் 4 திர்ஹம் கடனாக வாங்கி இருந்தார். அதற்கான காலக்கெடுவும் முடிந்திருந்தது. அந்த யூதர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வந்து புகார் கூறினார். இந்த நபர் எனக்கு 4 திர்ஹம் கடனைத் தர வேண்டும். அதனை திரும்பத் தரவில்லை என்று முறையிட்டார். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் அந்த சஹாபியை அழைத்து, இந்த யூதருக்குரிய பணத்தைக் கொடுத்து விடுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் கூறினார்கள்: ஹுஸூர் உங்களை உண்மையுடன் அனுப்பி வைத்த அந்த இறைவன் மீது ஆணையாக! நான் கடன் கொடுக்க வேண்டியதுள்ளது உண்மைதான். தற்போது கடனைத் திருப்பிக் கொடுக்க என்னிடம் ஒன்றுமில்லை எனக் கூறினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இந்த நபரின் கடனை திரும்பிச் செலுத்தி விடுங்கள் என மீண்டும் கூறினார்கள். ஆனால் அப்துல்லாஹ் அவர்களோ, தாங்கள் எங்களை கைபர் அனுப்பி வைப்பீர்கள். அதில் அதிகமான செல்வங்கள் கிடைக்கும். அதிலிருந்து நான் எனது கடனை அடைத்து விடுகிறேன் என்று அவரிடம் கூறி விட்டேன் என்று கூறினார். அவருக்குரிய உரிமையைச் செலுத்தி விடுங்கள் என்ற ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மூன்றாவது முறையாக கூறினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரு விஷயத்தை மூன்று முறை கூறி விட்டால் அது இறுதியான தீர்ப்பாகக் கருதப்பட்டது. எனவே, ஹஸ்ரத் அப்துல்லாஹ் உடனடியாக கடைவீதிக்குச் சென்றார்கள். ஒரு போர்வையை மேலங்கியாக உடுத்தி இருந்தார்கள். தலையிலும் ஒரு துணி வைத்திருந்தார்கள். தலைப்பாகையாக இருந்த துணியை தலையில் இருந்து மேலங்கியின் இடத்தில் உடுத்திக் கொண்டார்கள். அந்த போர்வையை 4 திர்ஹமிற்கு விற்று கடனை அடைத்து விட்டார்கள். (முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 5 பக்கம் 336 ஹதீஸ் எண் 15570. முஸ்னது இப்னு அபீ ஹுதுதுல் அஸ்லமி. பைரூத்தில் உள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் 1998-ல் அச்சிடப்பட்டது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நிலைநாட்டிய முன்மாதிரிகள் இவைதான். அவர் கேட்டுள்ள காலக்கெடுவை அளிக்கவும் என ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் யூதரிடம் கூறவில்லை. மாறாக, தனது தோழரிடம் உடனடியாக இவரது கடனைத் திருப்பிச் செலுத்துங்கள் என்று கூறினார்கள். அதனை செயல்படுத்த அந்த சஹாபிக்கு, தான் உடுத்திருந்த ஆடையை கடைவீதிக்குச் சென்று விற்க நேரிட்டது.

ஆக, இதுவே நீதி மற்றும் நேர்மைக்கான தரம் ஆகும். இந்த தரத்தை நாம் எல்லா மட்டத்திலும் நிறைவேற்றினால், இக்காலத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரை ஏற்றுக் கொண்ட உண்மையான மக்களைச் சார்ந்தவர்களாக நாம் கருதப்படுவோம். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வருகையின் நோக்கத்தை முழுமை செய்தவர்களாகவும் நாம் திகழ்வோம். அன்னார் இஸ்லாத்தின் போதனையை பரப்புவதற்காகவும், அதன் சிறப்புகளை உலகிற்குக் காட்டுவதற்காகவும் அனுப்பப்பட்டார்கள். அதன் மூலம் அதிகமான மக்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் ஒன்று கூட்டப்பட வேண்டும் என்பது நோக்கமாகும். நாம் உண்மையுடன் உலகிற்கு நேர்வழி வழங்கும்போது தான் இந்தப் பணி நடக்கும். உண்மையுடன் உலகிற்கு நேர்வழி காட்டும் வேளையில், உண்மையுடன் வழங்கப்பட்ட போதனைகளுக்கு ஏற்ப நீதியையும் நிலைநாட்ட வேண்டும்.

சூரா அஃராஃபின் வசனத்தை தொடக்கத்தில் நான் ஓதினேன். அதன் பொருள்: நாம் படைத்த மக்களில் உண்மையுடன் மக்களுக்கு நேர்வழி வழங்குபவர்களும் உள்ளனர். மேலும் அதன் மூலம் நீதியை நிலைநாட்டுகின்றனர்.


உண்மை மற்றும் நீதியை எடுத்துரைத்து நேர்வழியை வழங்குபவர்களே உண்மையான நேர்வழி வழங்குபவர்கள். உண்மையுடன் நேர்வழி வழங்கும் மக்களே வெற்றி பெறும் கூட்டத்தினர் ஆவர். இன்றும் கூட உண்மையுடன் நேர்வழி வழங்குபவர்களே வெற்றி பெறுவர். மேலும் அவர்கள் நீதியை நிலைநாட்டக் கூடியவர்கள் ஆவர். மனிதன் சுயமே நேர்வழியில் நிலைபெறவில்லை என்றால் பிறருக்கு அவர் என்ன நேர்வழியை வழங்குவார்? மனிதன் முதலில் சுயமே நீதியில் நிலைபெறவில்லை என்றால் மற்றவர்களுக்கு நீதியை நிலைநாட்டுமாறு எவ்வாறு கூற முடியும்?

எனவே நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் செய்த பைஅத் உடன்படிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்றால், அன்னாரின் வருகையின் நோக்கத்தை முழுமை செய்ய வேண்டும் என்றால், இஸ்லாத்தின் தூதுச் செய்தியை உலகிற்கு எட்ட வைக்க வேண்டும் என்றால், தப்லீகிற்குரிய உரிமையை வழங்க வேண்டும் என்றால், இந்த வழிமுறைக்கேற்ப அனைத்து உயர் நல்லொழுக்கங்களையும் மேற்கொள்ள வேண்டும். அதுவே இஸ்லாத்தின் போதனையாகும். அதனையே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நமக்கு போதித்துள்ளார்கள். அந்த நல்லொழுக்கங்களை மேற்கொள்ளுமாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் நமக்கு வழிகாட்டியுள்ளார்கள். உண்மை மற்றும் நீதியின் அடிப்படையில் நமது சாட்சியங்கள் இல்லையென்றால், நமது குடும்ப மற்றும் சமூக விவகாரங்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டுதலுக்கேற்ப இல்லையென்றால் எதிரிகளின் மீதான பகைமை மற்றும் காழ்ப்புணர்ச்சியிலிருந்து நமது உள்ளம் தூய்மையானதாக இல்லையென்றால் நமது தப்லீக் உண்மையான நேர்வழியை வழங்கக்கூடிய தப்லீகாக ஒருபோதும் அமையாது. அப்போது நமது நிலைகள் மற்றும் நமது நீதியின் தரத்தைக் கண்டு அந்நியர்கள் கூறுவார்கள். முதலில் நீங்கள் அந்த போதனையின்படி செயலாற்றுங்கள். நீங்கள் முதலில் சுயமே உங்களது சமூகத்தில் நீதியை நிலைநாட்டுங்கள். பிறகு எங்களுக்கு கூறுங்கள் என்று அவர்கள் கூறுவர்.

அஹ்மதிகளின் மீது மாபெரும் பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது. நீங்கள் உங்களது செயல்களினால் தப்லீகின் பாதையைத் திறக்க வேண்டும். நமது செயல்களினால் தப்லீகின் பாதை திறக்கப்படும்போது நமது செயல்களைக் கண்டு இஸ்லாத்தை அறிந்து கொள்ளும் மக்களால் நிச்சயமாக இஸ்லாத்தின் சிறப்புகளை ஒப்புக் கொள்ளாமல் இருக்கவே முடியாது. அல்லாஹ்வின் கட்டளைகளின்படி நமது வாழ்க்கையை அமைத்துக் கொள்பவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக. மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் செய்த பைஅத் உடன்படிக்கையின் படி செயல்படுபவர்களாக நாம் திகழ்வோமாக. மேலும் மற்றவர்களுக்கு நேர்வழி மற்றும் நீதியின் முன்னுதாரணங்களாகத் திகழ்வோமாக.

நான் தொழுகைக்குப் பிறகு ஒரு ஜனாஸா காயிப் தொழுகையை நடத்துவேன். அது மதிப்பிற்குரிய ஹஸன் முஹம்மது கான் சாஹிப் ஆரிஃப் அவர்களுடையதாகும். அன்னார் ஃபஸ்ல் முஹம்மது கான் சாஹிப் அவர்களுடைய மகன் ஆவார்கள். மர்ஹூம் முன்னாள் நாயிப் வகீலுத் தஃப்ஸீராக இருந்தார்கள். மேலும் கனடாவின்



B. Mohamed Adil ✆ 93632 06679 99433 38000



National Watch Company
Sales & Service
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

halal Grill house A/c
multi cuisine family restaurant
Thennampalayam, Near 'Centi Win' Company, Palladam Road, Tirupur.
Ph : 8220 690 222, 8220 691 222

93600 05888
78716 00664
IBR
Construction Materials



எங்களிடம் கட்டடத்திற்கு தேவையான சிமெண்ட், செங்கல், மணல், ஜல்லி, கிராவல், மெட்டல், ஹாலோபிளாக் மற்றும் அனைத்து பொருட்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.
சுப்புலட்சுமி நகர், நிர்மலா மாதா ஸ்கூல் ரோடு, குனியமுத்தூர், கோவை–5.

அஹ்மதிய்யா கெஸட் பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்தார்கள். நவம்பர் மாதம் 3 ஆம் தேதி தமது 97 –வது வயதில் அன்னார் மரணம் நிகழ்ந்தது. إِنَّا لِلَّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்திருந்தார்கள். ஃபஸ்ல் முஹம்மது கான் சாஹிப் ஆரிஃப் அவர்கள் 1920 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் தேதி ஜலந்தரில் பிறந்தார்கள். அன்னாரின் தந்தை 1915 –ல் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் அருளுக்குரிய கரங்களில் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணையும் நற்பேறு பெற்றார்கள். மர்ஹூமின் தந்தை 35 ஆண்டு காலம் அரசாங்கத் துறைகளில் பணி செய்து வந்தார்கள். தப்லீகில் மிக ஆர்வம் இருந்தது. அக்காலத்தில் 2 ஆங்கிலேயர்களிள் அன்னார் மூலம் முஸ்லிம் ஆனார்கள். அது மட்டுமல்லாமல் ஏராளமான மக்களுக்கு அன்னார் மூலம் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்ளும் நற்பேறு கிடைத்தது. மர்ஹூம் பி.ஏ படித்தார்கள். முதலில் அரசாங்கப் பணி செய்து வந்தார். பின்னர் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களது அறிவுரையின்படி பி.ஏ படித்து முடித்தார்கள். பின்னர் எம்.ஏ படித்தார்கள். 1943 ஆம் ஆண்டு வரை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் டில்லி வருகை தந்த போது ஹஸன் முஹம்மது கான் ஆரிஃப் சாஹிப் அவர்கள் தமது வாழ்க்கையை ஜமாஅத்திற்கு அர்ப்பணிக்க முடிவு செய்தார்கள். அப்போது இந்திய அரசாங்கத்தின் ஒரு துறையில் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். மர்ஹூம் விஷயத்தை தனது தந்தையிடம் கூறியபோது, அன்னார் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். அதே நேரத்தில் இவ்வாறும் அறிவுரை கூறினார்கள்: நீங்கள் வக்ஃப் செய்ய உள்ளீர்கள். அதனால் நிறைய ஒய்வு கிடைக்கும் என எண்ணி விடாதீர்கள். உண்மையான முறையில் வக்ஃப் செய்ய வேண்டும் என்றால் நினைவிற் கொள்ளுங்கள். இது முட்கள் நிறைந்த பாதையாகும். தற்போது நீங்கள் அனுபவித்து வரும் சலுகைகள் கிடைக்காது. சாதாரண மனிதனாக வாழ்க்கையைக் கழிக்க நேரிடும். தற்போது கிடைத்து வரும் வருமானத்தை விட மிக குறைவான வருமானமே கிடைக்கும்.

ஆக, அன்னார் நான் வக்ஃப் செய்வேன் என்று கூறி தந்தையுடன் சென்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் முதலில் நீங்கள் உங்களது பி.ஏ வை முழுமை செய்யுங்கள். பின்னர் வக்ஃப் செய்ய வாருங்கள் என்று கூறினார்கள். அதன் அடிப்படையில் பி.ஏ முடித்து விட்டு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுக்கு தகவில் கொடுத்தார்கள். பின்னர் வழிகாட்டுதலுக்கேற்ப மர்கஸைச் சென்றடைந்தார்கள். அரசாங்கப் பணியை ராஜினாமா செய்து விட்டுச் சென்றார்கள். நாயிப் வகீலுத் திஜாரத் என்ற பொறுப்பில் பணியமர்த்தப்பட்டார்கள். இந்திய பிரிவினையின்போது மர்ஹூம் தர்வேஸாக காதியானில் தங்க விண்ணப்பித்தார்கள். ஆனால் பிற்காலத்தில் தலைமையக வழிகாட்டுதலின்படி அவர்களின் தேவையைக் கருத்தில் கொண்டு பாகிஸ்தான் ரப்வாவிற்கு அழைக்கப்பட்டார்கள். அங்கு அவர்கள் நாயிப் வகீலுத் திஜாரத் என்ற பொறுப்பில் பணியமர்த்தப்பட்டார்கள். பின்னர் புர்கினோஃபாஸோ அலுவலகத்தின் இன்சார்ஜ் ஆக இருந்தார்கள். 1951 –ல் வகாலத்துத் தஃப்ஸீர் அலுவலகத்தில் பணியமர்த்தப்பட்டார்கள்.

அடுத்து 1953 –ல் தஹ்ரீகே ஜதீத் அலுவலகத்தில் போலீஸ் சோதனை நடத்தியது. அப்போது மர்ஹூம் கைது செய்யப்பட்டார். பின்னர் இராணுவ ஆட்சி செயல்படுத்தப்பட்டபோது அன்னார் விடுதலையானார்கள். இவ்வாறு இறைவழி கைதியாகத் திகழும் நற்பேறும் அன்னாருக்கு கிடைத்தது. 30 ஆண்டு காலம் வரை நாயிப் வகாலத்துத் தஃப்ஸீர் என்ற பொறுப்பில் தொண்டாற்றும் நற்பேறு அவர்களுக்கு கிடைத்தது. ஏனைய பல்வேறு அலுவலகங்களிலும் அன்னார் தொண்டாற்றி –யுள்ளார்கள். வகீலுத் தீவானாகவும், வகீலுத் தஃலீமாகவும், வகீலுல் மால் ஆகவும் இருந்துள்ளார்கள். 1981 –ல் ஒய்வு பெற்றார்கள். பின்னர் கனடாவிற்குச் சென்றார்கள். கனடா சென்று அஹ்மதிய்யா கெஸட் பத்திரிகையின் எடிட்டராக தொண்டாற்றினார்கள். 2006 ஆம் ஆண்டு வரை அதில் தொண்டாற்றும் பாக்கியம் பெற்றார்கள். ஆரம்ப கால மூஸியாக இருந்தார்கள். 1978 –ல் அன்னார் தூய கஃபன் (சவப்போர்வை) என்ற நூலை உருதுவில் எழுதினார்கள். ஆங்கிலப் புலமையும் இருந்ததால் ஆங்கிலத்தில் எழுதத் தொடங்கினார்கள். ஆனால் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் உருது மொழியில் அந்த புத்தகத்தை எழுதுங்கள் எனக் கூறினார்கள். ஏனென்றால் உருது மொழியில் ஈஸா மஸீஹின் சவப்போர்வை தொடர்பாக எழுதப்பட்ட முதல் நூலாக இது இருக்கும் என்று கூறினார்கள். அதனை தவிர குழந்தைகளுக்கான பல நூல்களையும் அன்னார் எழுதியுள்ளார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் முன்னறிவிப்புகள் மற்றும் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களின் வாழ்க்கை வரலாறு போன்ற நூல்களும் அடங்கும்.

1944 ஆம் ஆண்டு அன்னாரின் திருமணம் நடந்தது. 4 மகன்களும், 4 மகள்களும் உள்ளனர். அவர்கள் அமெரிக்கா மற்றும் கனடாவில் உள்ளனர். அன்னாரின் பெரிய மருமகள் எழுதுகின்றார்: அன்னார் தஹஜ்ஜுத் தொழுபவராக இருந்ததை நான் கண்டுள்ளேன். மிக உருக்கத்துடன் தொழக் கூடியவர். கிலாஃபத்துடன் எல்லையற்ற அன்பும் மரியாதையும் கொண்டவர். பாகிஸ்தானில் ஏராளமான அனாதை பிள்ளைகள் மற்றும் விதவைகளுக்கு நிரந்தரமாக பொருளாதார உதவி செய்து வந்தது எங்களுக்கு அன்னாரின் மரணத்திற்குப் பிறகே தெரிய வந்தது.

கனடா அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்: மர்ஹூம் எந்தப் பகுதியில் இருந்தாரோ அங்கு சீக்கியர்கள் அதிகம் வசிக்கின்றனர். சீக்கியர் –களுடனான நட்பின் காரணமாக அவர்கள் உருவாக்கிய Sikh Culture Assocaiton –ன் தலைவராக மர்ஹூமை ஆக்கி விட்டார்கள். மிகவும் நிர்பந்தித்து நீங்கள் எங்கள் தலைவராகுங்கள் என்று கூறி ஆக்கினார்கள். அன்னாரால் டிரைவ் செய்ய முடியாது. இருப்பினும், நீண்ட தூரம் 2, 3 பஸ்களில் மாறி மாறி பயணம் செய்து ஜுமுஆ தொழுகையை தொழ வந்து விடுவார்கள்.

நாயிப் அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்: அன்னார் கனடா வந்த பிறகு அஹ்மதிய்யா கெஸட் பத்திரிகையின் தரத்தை பெருமிதம் கொள்ளும் வகையில் மேம்படுத்தினார்கள். கிலாஃபத்தின் மீது முழுமையான நம்பிக்கை மற்றும் அனைத்து கலீஃபாக்களுடனும் அன்புமிக்க தொடர்பும் கொண்டவராக இருந்தார்கள்.

நானும் எனது குழந்தைப் பருவம் முதலே அன்னாரை அறிவேன். ஆனால் நான் கலீஃபா ஆன பிறகு அன்னாரிடம் நான் கண்ட மாற்றம் என்னை ஆச்சரியப்பட வைத்தது. துவக்கத்தில் கம்பியூட்டர் இல்லாத போது அஹ்மதிய்யா கெஸட் பத்திரிகையின் உருது பகுதியை தமது கரங்களால் எழுதி ஆங்கிலப் பகுதியை டைப் செய்து வந்தார்கள். குத்பாக்களின் ஆங்கில மொழியாக்கம் செய்து வந்தார்கள். நினைவாற்றல் மிக்கவர். இஸ்லாமிய வரலாற்றை நன்கு படித்தவர். ஏதாவது புத்தகம் அல்லது பத்திரிகையை எப்போதும் படித்து வந்தார்கள். பெரும்பாலான சஹாபாக்களின் ஈமானை வலுவூட்டும் சம்பவங்களைக் கூறி வந்தார்.

அல்லாஹ் மர்ஹூமுடன் கருணையுடன் நடந்து கொள்வானாக. பாவமன்னிப்பை வழங்குவானாக. அன்னாரின் அந்தஸ்தை உயர்த்துவானாக. அன்னாரின் பிள்ளைகளுக்கும் சந்ததிகளுக்கும் கிலாஃபத் மற்றும் அஹ்மதிய்யத்துடன் உறுதியான தொடர்பு வைக்கும் பாக்கியத்தை வழங்குவானாக.

★ ★ ★ ★ ★

**Classic Mobile's & Watch, Hiba watch & Mobiles**
Poyampalayam, P.N. Road,
Tiruppur.
Ph: 95666 47717

0422-2399980, 4351980
emial: metrozonesince1980@gmail.com
web: www.metrozoneonline.com
**Metro Zone**
WATCH, MOBILES & ELECTRONICS
SALES & SERVICE

276, N.H. Road, Coimbatore - 641 001.

**அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பொருத்த வரையில் நாங்கள் எங்கு சென்றாலும் அன்பு, நேசம், அமைதி, சாந்தி ஆகியவற்றின் தூதுச் செய்தியையே வழங்குகின்றோம். இதுவே இஸ்லாத்தின் போதனையாகும். திருக்குர்ஆனின் போதனைக்கு ஏற்ப ஓர் அஹ்மதி பள்ளிவாயிலைப் பாதுகாப்பவராக இருப்பதுடன் கிறித்தவ ஆலயங்கங்களைப் பாதுகாப்பவராகவும் இருக்க வேண்டும். யூதர்களின் மடங்களைப் பாதுகாப்பவர்களாகவும் இருக்க வேண்டும். ஏனைய மதங்களின் வணக்கஸ்தலங்களைப் பாதுகாப்பவர்களாகவும் இருக்க வேண்டும். பள்ளிவாயிலைக் கட்டிய பிறகு நமது பள்ளிவாயிலைப் பாதுகாப்பது எவ்வாறு நமது கடமையாக இருக்கின்றதோ, அதன் தூய்மையை எவ்வாறு நாம் கருத்தில் கொள்வோமோ, அதன் சுற்றுச்சூழலை எவ்வாறு தூய்மையாக வைத்திருப்போமோ, அவ்வாறே நமது பகுதியில் மற்ற மதங்களின் வணக்கஸ்தலங்கள் இருந்தால், அவற்றைப் பாதுகாப்பதும் அவற்றின் சுற்றுச்சுழலைத் தூய்மையாக வைத்திருக்க முயற்சி செய்வதும் நம்மீது கடமையாக இருக்கின்றது. இஸ்லாத்தின் தோற்றுனரான ஹஸ்ரத் நபிகள் நாயகம் [ஸல்] அவர்கள், நாட்டுப்பற்று உங்களின் ஈமானின் ஒரு பகுதியாகும் என்று கூறியுள்ளார்கள். எனவே, ஓர் அஹ்மதி எந்த நாட்டில் வாழ்ந்தாலும் அந்த நாட்டின் மீது அன்பு கொண்டவாறு அதன் முன்னேற்றத்திற்காகப் பணியாற்ற வேண்டும். அத்துடன் அங்குள்ள மக்களுக்கு அன்பு, அமைதி, நேசம் ஆகியவற்றின் தூதுச்செய்தியை எட்ட வைப்பதுடன் அதைப் பரப்பவும் வேண்டும். பள்ளிவாயில் கட்டப்பட்ட பிறகு இங்கு வசிக்கின்ற அஹ்மதிகள் முன்னரை விட அதிகமாக இங்குள்ள மக்களுக்குரிய உரிமைகளைச் செலுத்துபவர்களாக இருப்பர் – இன்ஷா அல்லாஹுத்தஆலா.**

## ஏப்ரல் 2017 –ல் ஜெர்மனியிலுள்ள மார்பெர்க்கில் பள்ளிவாயிலுக்கான அடிக்கல் நாட்டப்படும் நிகழ்ச்சியில் ஸய்யிதுனா ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் நிகழ்த்திய எழுச்சிமிகு உரை.

(அப்துல் மாஜித் தாஹிர், கூடுதல் வகீலுத் தப்ஷீர், இலண்டன் அவர்களின் அறிக்கை)

**ஹுஸூர் அவர்களின் சொற்பொழிவு:**

தஷஹ்ஹுது மற்றும் தஸ்மிய்யா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: எல்லாவற்றிற்கும் முதலாவதாக நான் கண்ணியமிக்க விருந்தினர்கள் அனைவருக்கும் எனது ஸலாத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன், அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாத்துஹு. சாந்தி, அமைதி, அன்பு, நேசம் ஆகியவற்றின் அன்பளிப்பை அவர்களுக்கு நான் வழங்குகின்றேன். உள்ளூர் மக்கள் பெரும் எண்ணிக்கையில் நமது சபைக்கு வந்திருப்பதை இப்போது நான் பார்க்கின்றேன். நீங்கள் இங்கு வந்திருப்பது, நீங்கள் மிகவும் திறந்த உள்ளத்தை உடையவர்கள் என்பதற்கான ஆதாரமாக இருக்கின்றது. அப்படிப்பட்ட திறந்த உள்ளத்தை உடையவர்களுக்கு அன்பு, அமைதி மற்றும் நேசத்தின் அன்பளிப்பை எவ்வளவு வழங்கினாலும் அது குறைவே ஆகும். நாம் திறந்த உள்ளத்துடன் ஒருவர் மற்றவரைப் புரிந்து கொள்பவர்களாகவும், ஒருவர் மற்றவரின் கருத்தைக் கேட்பவர்களாகவும் இருந்தால்தான் சமுதாயத்தில் அமைதியும் சாந்தியும் உருவாகும் என்பதே உண்மையாகும். எனவே, எங்கு நான் எல்லாவற்றிற்கும் முதலாவதாக உங்களுக்குசாந்தியின் அன்பளிப்பைவழங்கினேனோ, அங்கு நான் உங்களுக்கு இவ்விஷயத்திற்கான வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். அதாவது, நீங்கள் மற்றவர்கள் கூறும் விஷயங்களைக் கேட்க விரும்புகின்றீர்கள் என்பதற்கான ஆதாரமாகவும் இது இருக்கின்றது. ஏனென்றால், இது ஒரு வகையில் ஒரு முஸ்லிம் ஜமாஅத்தின் மார்க்க நிகழ்ச்சியாக இருக்கின்றது. அந்த நிகழ்ச்சியில் அவர்கள் தங்களது வணக்கஸ்தலத்திற்கு அடிக்கல் நாட்ட இருக்கின்றனர். எனவே, எந்த உலக நோக்கத்தைப் பெறுவதற்காகவும் நீங்கள் இங்கு வரவில்லை. நிச்சயமாக உங்களது உள்ளங்களில் இந்த எண்ணம்தான் இருக்கும். அதாவது, நாம் இங்கு செல்ல வேண்டும். ஏனென்றால், நீண்ட காலமாக நாம் இவர்களைப் பற்றி அறிந்திருக்கின்றோம். இம்மக்களுக்கு நம்முடன் தொடர்புகளும் இருந்து வருகின்றன என்பதே உங்களுடைய உள்ளத்தில் இருக்கின்றது. ஜமாஅத்தும் இங்கு செயல் துடிப்புடன் இருந்து வருகிறது. இதை நாம் பார்த்துள்ளோம். இதைப் பற்றி நாம் நன்கு புரிந்துள்ளோம். ஆனால், பள்ளிவாயிலுக்கு அடிக்கல் நாட்டுகின்ற நிகழ்ச்சிக்குச் சென்று அங்கு இம்மக்கள் தமது நிகழ்ச்சிகளை எவ்வாறு நடத்துகின்றனர், மேலும் அங்கு என்னென்ன விஷயங்கள் பேசப்படுகின்றன என்பதைப் பற்றித் தெரிந்து கொள்வதற்காகவே நீங்கள் இங்கு வந்துள்ளீர்கள். இவ்வகையில் நீங்கள் உண்மையிலேயே புகழ்ந்து கூறுவதற்குத் தகுதியுடைய மக்களாக இருக்கின்றீர்கள். இரண்டாவதாக, இங்கு வசிக்கின்ற அஹ்மதிகளைப் பார்த்து நான் மகிழ்ச்சி அடைகின்றேன். இதற்குக் காரணம் அவர்கள் இங்கு வந்து உள்ளூர் மக்களுடன் உள்ள தொடர்புகளை அதிகப்படுத்தியுள்ளனர். அஹ்மதிகளுடன் உள்ள தொடர்புகளின் காரணமாகவும் அஹ்மதிகள் உங்களுடன் ஒன்றரக் கலந்து விட்டதன் காரணமாகவும் அவர்களின் அழைப்பின் பேரில் இங்கு நீங்கள் வந்துள்ளீர்கள். மேலும், எங்களது நிகழ்ச்சிக்கு பொலிவை ஏற்படுத்தியுள்ளீர்கள். அஹ்மதிய்யா ஜமாஅத்தை பொருத்த வரையில் நாங்கள் எங்கு சென்றாலும் அன்பு, நேசம், அமைதி, சாந்தி ஆகியவற்றின் தூதுச் செய்தியையே வழங்குகின்றோம். இதுவே இஸ்லாத்தின் போதனையாகும். அமீர் சாஹிப் அவர்கள் இங்கு நாங்கள் படைப்பினங்களுக்குச் சேவையாற்றும் பணியையும் செய்து வருகின்றோம். முதியோர் இல்லங்களுக்குச் சென்று அல்லது ஏனைய பல்வேறு தொண்டு நிறுவனங்களுக்குச் சென்று பொதுத் தொண்டுகளைச் செய்து வருகின்றோம் என்று குறிப்பிட்டார்கள். படைப்பினங்களுக்குத் தொண்டு செய்வது என்பது ஒரு மனிதனின் கடமையாகும். தனது மற்ற சகோதரர்களுக்கும் பயனளிக்கும் வகையில் நடந்து கொள்வது ஒரு மனிதனின் கடமையாக இருக்கின்றது. இவ்விஷயத்தில் அந்த சகோதரர் எந்த மதத்தைச் சார்ந்தவர் என்பதை நாம் பார்க்கக் கூடாது. மனிதன் என்ற நிலையில் பரஸ்பரம் ஒருவர் மற்றவரைப் புரிந்து கொள்ள வேண்டும். பரஸ்பரம் நம்மில் ஒருவர் மற்றவருக்குப் பயனளிக்கக் கூடியவராக இருக்க வேண்டும். மேலும், நம்மில் ஒருவர் மற்றவரின் தேவைகளை நிறைவேற்ற வேண்டும். இது மிகவும் அவசியமான விஷயமாகும். இது இல்லையென்றால் இறை வணக்கம் செய்வதால் எந்தப் பயனும் ஏற்படாது. எனவேதான் அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு தெளிவாகக் கூறியுள்ளான். அதாவது, எவர்கள் பள்ளிவாயில்களுக்கு வருகின்றனரோ அவர்கள் பள்ளிவாயிலுக்கு வந்து தொழுது விட்டு மற்றவர்களுக்குத் துன்பமிழைக்கக் கூடியவர்களாக இருந்தால், பிறகு பயனளிக்கும் வகையில் செயல்படாமல் இருந்தால், அனாதைகளைக் கருத்தில் கொள்ளாமல் இருந்தால், முதியவர்களுக்குத் தொண்டு செய்யாமல் இருந்தால், ஏழைகளுக்கு உதவாமல் இருந்தால் அல்லது வேறு வகையில் படைப்பினங்களுக்குத் தொண்டாற்றும் பணியைச் செய்யாமல் இருந்தால் அமைதி, அன்பு, நேசம், சாந்தி ஆகியவற்றைப் பரப்பாமல் இருந்தால், அப்படிப்பட்டவர்களின் தொழுகை ஏற்றுக் கொள்ளப்படாது. மாறாக, அந்த தொழுகைகள் அவர்களுக்கு பாவமாக ஆகி விடும். எனவே, திருக்குர்ஆன் நீங்கள் படைப்பினங்களுக்குத் தொண்டாற்றும் பணியைச் செய்ய வேண்டும் என்பதை இந்த அளவு வலியுறுத்திக் கட்டளையிடுகிறது. எனவேதான் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைச் சேர்ந்த நாங்கள் உண்மையான இஸ்லாமிய போதனைகளுக்கு ஏற்ப செயல்பட்டவாறு படைப்பினங்களுக்குத் தொண்டாற்றும் பணிகளில் அதிகமாகப் பங்கு பெற்று வருகிறோம். லார்டு மேயர் அவர்கள் தமது சொற்பொழிவில் பல்கலைக்கழகத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தார்கள். கல்வியைப் பொருத்தவரையில், அஹ்மதிய்யா ஜமாஅத் கல்வியைப் பரப்புகின்ற பணியில் உலகிலுள்ள ஏழை நாடுகளில் பெரும் தொண்டாற்றி வருகிறது. அதற்காகப் பெரும் முயற்சியும் செய்து வருகிறது. அஹ்மதிய்யா ஜமாஅத் கல்வியைப் பரப்புகின்ற பணியை எப்படி செய்கிறது என்பதைப் பற்றி எடுத்துக் கூறுவதற்கு முன்னதாக, பெண்கள் தொடர்பாக உள்ளத்தை ஈர்க்கக்கூடிய ஓர் ஆய்வை இங்கு நான் கூற விரும்புகின்றேன். ஏனென்றால், இங்கு பெண்களும் பெரும் எண்ணிக்கையில் அமர்ந்திருப்பதை நான் பார்க்கின்றேன். அஹ்மதிய்யா ஜமாஅத்தில் ஆண்களை விட பெண்களே அதிகமாகக் கல்வி கற்றவர்களாக இருக்கின்றனர். பல்கலைக்கழகத்திலும் கூட அவர்கள் கல்வி கற்று

வருகின்றனர். பல்வேறு தொழில்கள் தொடர்பான கல்வியையும் அவர்கள் கற்று வருகின்றனர். அவர்கள் ஏன் இவ்வாறு செய்கின்றனர்? என்றால் ஒரு பெண் கல்வியைப் பெற்றுக் கொண்ட பிறகு, அந்த கல்வி அவளுடன் மட்டும் தொடர்புடைய -தாக அதாவது குறிப்பிட்ட எல்லைக்குட்பட்டதாக இருப்பதில்லை. நிச்சயமாக ஒவ்வோர் ஆணும் பெண்ணும் கல்வி கற்ற பிறகு அந்த கல்வியைப் பரப்புகின்றனர். அந்த கல்வியைப் பெற்ற பிறகு ஏதாவதொரு வகையில் அவர்கள் நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் தொண்டு செய்கின்றனர். ஆனால், ஒரு பெண் கல்வி கற்ற பிறகு ஒரு ஆணை விட அவளுக்கு இந்த விஷயத்தில் மேன்மை இருக்கிறது. அதாவது அவள் தமது குழந்தைகளை நல்ல முறையில் பராமரித்து வளர்க்கக் கூடியவளாக இருக்கின்றாள். எனவேதான், இஸ்லாத்தின் தோற்றுனரான ஹஸ்ரத் முஹம்மது முஸ்த.்.பா (ஸல்) அவர்கள், சொர்க்கம் தாய்மார்களின் காலடியில் இருக்கின்றது என்று கூறியுள்ளார்கள். இவ்வாறு அவர்கள் கூறியதற்குக் காரணம் என்ன -வென்றால், ஒரு பெண் தனது குழந்தைகளுக்குக் கல்வியை வழங்கி, பிறகு தமது குழந்தை -களிடம் நல்ல சீர்திருத்தத்தையும் அவர் ஏற்படுத்துகின்றார். அந்த குழந்தைகளை நாட்டில் நல்ல குடிமக்களாக அவர் ஆக்குகின்றார். நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் பயன்படக்கூடிய ஒரு சொத்தாக அவர்களை உருவாக்குகின்றார். இவ்வாறு அவர் தமது குழந்தைகளை சொர்க்கத்திற்குக் கொண்டு செல்பவராக ஆகி விடுகின்றார். இஸ்லாத்தின் பார்வையில் சொர்க்கம் என்பது இரு வகைப்படும். இந்த உலகத்திலும் ஒரு சொர்க்கம் இருக்கின்றது. மரணித்த பிறகும் ஒரு சொர்க்கம் இருக்கின்றது. இந்த உலகிலுள்ள சொர்க்கம் இங்கிருந்தே ஆரம்பமாகி விடுகின்றது. செயல்படக்கூடிய மனிதனாக ஒருவன் ஆகும்போது, நல்லொழுக் -கத்தைப் பேணுகின்ற மனிதனாக ஒருவன் ஆகின்றபோது, எங்கு அவன் அல்லாஹ்வை வணங்குவானோ, அங்கு அவன் தனது ஏனைய சகோதரர்களுடனும் மனிதர்களுடனும் அன்பு கொள்ளக்கூடியவனாக ஆகி விடுகின்றான். அமைதியையும், சாந்தியையும், நிம்மதியையும் பரப்பக் கூடியவனாக ஆகிவிடுகின்றான். நிச்சயமாக எந்த நபர் அமைதியையும் சாந்தியையும் நிம்மதியையும் பரப்பக்கூடியவராக இருப்பாரோ, அதன் மூலமாக சுயமே அவர் தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்கின்றார். ஒரு வகையில் அப்படிப்பட்டவர் சொர்க்கத்தில் இருக்கின்றார். அவர் மற்றவர்களுக்காகவும் இந்த உலகில் சொர்க்கத்தைப் பெறுவதற்கான வழியாக ஆகி விடுகின்றார். ஒருபுறம் தீவிரவாதிகள் தீவிரவாத செயல்களில் ஈடுபடுவதை நாம் பார்க்கின்றோம். அப்பாவி மக்களை கிளப்புகளுக்குச் சென்று துப்பாக்கியால் சுட்டுக் கொல்வதாக இருந்தாலும் சரி அல்லது தற்கொலைக் குண்டுகளை வெடிக்கச் செய்து மக்களைக் கொல்வதாக இருந்தாலும் சரி அல்லது வேறு எதாவதோர் இடத்தில் குழப்பத்தை உருவாக்குவதாக இருந்தாலும் சரி, நாம் பார்ப்பது போன்று முஸ்லிம் நாடுகளில் உள்ளவர்கள் தங்களது நாட்டிலுள்ள முஸ்லிம்களையே கொல்வதாக இருந்தாலும் சரி அல்லது மேற்கத்திய நாடுகளிலுள்ள மக்களைக் கொல்வதாக இருந்தாலும் சரி அத்தகைய மக்கள் அல்லாஹ் சொர்க்கமாக உருவாக்கியுள்ள இந்த உலகை தமது செயல்களால் நரகமாக்கி விடுகின்றனர். இவ்வகையில் அவர்கள் ஒருபோதும் புகழ்ந்து கூறுவதற்குத் தகுதி உடையவர்கள் அல்ல. மறுபுறம் நல்ல முஸ்லிம்களையும் நாம் பார்க்கின்றோம். நல்ல மனிதர்களையும் நாம் பார்க்கின்றோம். அவர் கிறித்தவராக இருந்தாலும் அல்லது யூதராக இருந்தாலும் அல்லது எந்த மார்க்கத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரியே. அப்படிப்பட்டவர்கள் தமது சுற்றுச் சூழலில் அமைதியையும் சாந்தியையும் அன்பையும் நேசத்தையும் பரப்புகின்றனர். ஒருவகையில் அப்படிப்பட்ட மக்கள் இந்த உலகையும் கூட சொர்க்கமாக ஆக்கி விடுகின்றனர். எந்த மக்கள் மனிதர்களுக்குத் தொண்டு புரிகின்றனரோ அவர்கள் இந்த உலகை சொர்க்கமாக ஆக்கி விடுகின்றனர். அப்படிப்பட்டவர்களைப் பற்றியே இறைவன், நான் அவர்களது இறை வணக்கங்களை ஏற்றுக் கொள்கின்றேன் என்று கூறுகின்றான். பிறகு, இந்த இறை வணக்கங்கள்தான் மறுவுலகத்தில் மனிதனை சொர்க்கத்தின் வாரிசாக ஆக்கி விடுகின்றது. எனவே, நான் ஏற்கெனவே கூறியது போன்று, மனிதர்களுக்கு நாம் தொண்டு செய்யாமல் இந்த இறை வணக்கங்களை நிறைவேற்ற முடியாது. மற்ற மனிதர்களுக்காக உள்ளத்தில் அனுதாப உணர்வும் வேதனையும் அன்பும் இல்லாமல் இருந்தால் அத்தகைய இறைவணக்கங்கள் பயனற்றவையாகும். எனவே, எவர்கள் அமைதியை விரும்பக் கூடியவர்களாகவும் அன்பைப் பரப்பக்கூடியவர்களாகவும் இருக்கின்றார்களோ அவர்கள்தான் இவ்வுலகின் சொர்க்கத்தை உருவாக்கக் கூடியவர்களாக இருக்கின்றனர். அவர்களே மறுவுலகிலும் சொர்க்கத்திற்குச் செல்லக் கூடியவர்களாக இருக்கின்றனர். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: நான் இரு பெரும் நோக்கங்களை நிறைவேற்று -வதற்காகவே வந்துள்ளேன். அதில் ஒன்று, மனிதன் தனது இறைவனை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். அவனை வணங்க வேண்டும். அவனுக்குரிய உரிமையைச் செலுத்த வேண்டும். எனது வருகையின் இரண்டாவது நோக்கம் இதுவாகும். ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்கு கண்ணியம் அளிக்க வேண்டும். அவனுக்குரிய உரிமையைச் செலுத்த வேண்டும். ஒருமுறை என்னிடம் உலகில் அமைதியையும் சாந்தியையும் எவ்வாறு நிலைநாட்ட முடியும் என்று ஒருவர் கேட்டார். அதற்கு நான் உண்மையான அமைதியையும் சாந்தியையும் நிலைநாட்ட வேண்டும் என்றால், ஒருவர் தனக்குரிய உரிமையைப் பெறுவதற்குக் கோரிக்கை வைப்பதற்குப் பகரமாக, அவர் மற்றவர் -களுக்குரிய உரிமையை வழங்குவதற்கு முயற்சி செய்ய வேண்டியது அவசியமானதாகும். அவ்வாறு செய்தால்தான் நாம் உண்மையான அன்பையும் நேசத்தையும் பரப்ப முடியும். இதுவே இறை வணக்கம் தொடர்பாகவும் மனித குலத்திற்குத் தொண்டு செய்வது தொடர்பாகவும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நிலையாக இருந்து வருகிறது. இந்த நிகழ்ச்சியில் ஒரு பாராளுமன்ற உறுப்பினரும் வந்திருந்தார்கள். அவர்களும் கூட, மனிதர்களுக் -கிடையில் ஏற்பட வேண்டிய நல்லிணக்கத்தைப் பற்றி குறிப்பிட்டார்கள். நிச்சயமாக நல்லிணக்கம் என்பது மிகவும் முக்கியமான ஒரு விஷயமாகும். நமக்கிடையே நல்லிணக்கம் இருந்தால்தான் நம்மில் ஒருவர் மற்றவரைப் பற்றி கருத்தில் கொள்ள முடியும். அதன் மூலமாகவே நாம் ஒற்றுமையாக இருக்க முடியும். உலகில் பல்வேறு மதங்கள் உள்ளன. முஸ்லிம்கள் இருக்கின்றனர். கிறித்தவர்கள் இருக்கின்றனர். யூதர்கள் இருக்கின்றனர். எல்லா மதங்களின் தோற்றுனர்கள் மீதும் நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். அவர்கள் இறைவன் புறமிருந்து வந்தவர்கள் என்று நாங்கள் உறுதியாக நம்புகின்றோம். இதுவே இஸ்லாத்தின் உண்மையான போதனையாக இருக்கின்றது. இந்த போதனையின் மூலமாகவே மனிதர்களுக்கிடையிலுள்ள நல்லிணக்கம் வளர்ச்சியடைகின்றது. ஒருவர் இந்த மதத்தின் மீது நம்பிக்கை கொண்டிருப்பவரை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று கூறினால் அல்லது அந்த மதத்தின் தோற்றுனரைப் பொய்யர் என்று கூறினால் அல்லது அவருக்கு எதிராகத் தவறான விஷயத்தைப் பேசினால் அவர் உண்மையான முஸ்லிமாக இருக்க முடியாது. அல்லாஹ் திருக்குர்ஆனில் இதுபற்றி எந்த அளவு வலியுறுத்திக் கூறியுள்ளான் என்றால், நீங்கள் சிலை வணக்கம் செய்பவர்களின் சிலைகளைப் பற்றி அவமரியாதையாகப் பேசாதீர்கள். ஏனென்றால், அதற்கு பதில் கூறும் வகையில் அவர்கள் உங்களது இறைவனை ஏசலாம். அவனை தீயவன் என்று கூறலாம். அவனை தீயவன் என்று கூறும்போது, பிறகு அதனால் உங்களிடம் பகைமை உருவாகும். உள்ளங்களில் பகைமை உருவாகும்போது, பிறகு அதனால் குழப்பம் ஏற்படும். பரஸ்பரம் உங்களில் ஒருவர் மற்றவருக்கு எதிராகச் செயல்படுவதற்கான முயற்சிகளைச் செய்வர். ஒருவர் மற்றவருக்கு இழப்புகளை ஏற்படுத்த முயற்சி செய்வர். இவ்வாறு அன்பிற்குப் பகரமாக வெறுப்புகள் உருவாகத் தொடங்கி விடுகின்றன. எனவே, ஓர் உண்மையான முஸ்லிமின் பணி இதுவாகும். அதாவது, அவர் ஒவ்வொரு மதத்தைச் சார்ந்தவருக்கும் கண்ணியமளிப்பதுடன் அவர்களது எல்லா நபிமார்கள் மீதும் நம்பிக்கை கொள்ள வேண்டும். எனினும் இந்த விஷயத்தையும் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது, இறைவனுக்கு இணையாக வைக்கப்படுகின்ற அவர்களது சிலைகளைப் பற்றி தீய விஷயங்களை நீங்கள் கூறக் கூடாது. ஏனென்றால் இதன் மூலமாகவும் கூட குழப்பம் ஏற்படுகின்றது. எனவே அன்பு, அமைதி மற்றும் சாந்தியைப் பரப்புவதற்கு இந்த அளவுகோலைத்தான் இஸ்லாம் நமக்கு எடுத்துக் கூறியிருக்கின்றது. ஒருவர் கடைபிடிக்கின்ற மரபுகள் பல்வேறு வகையில் இருக்கலாம். அவர் சார்ந்துள்ள மதம் வெவ்வேறானதாக இருக்கலாம். ஆனால் அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறியிருப்பது போன்று மார்க்கத்தில் எவ்வித பலவந்தமும் இல்லை. இஸ்லாம் இறுதி மார்க்கமாக இருக்கின்றது என்பதில் நமக்கு உறுதியான நம்பிக்கை இருந்தும் கூட, எல்லா மார்க்கங்களில் உள்ள நல்ல விஷயங்களும் இஸ்லாத்தில் இருக்கின்றது என்பதில் நம்பிக்கை வைத்தவாறு ஓர் உண்மையான முஸ்லிம் அந்த நல்ல விஷயங்களுக்கு ஏற்ப செயல்படுபவராக இருக்கின்ற நிலையிலும் கூட, மார்க்கத்தை ஏற்றுக் கொள்ள வைப்பதில் நாம் ஒருபோதும் பலவந்தத்தைக் கைக்கொள்வதில்லை. நான் ஏற்கனவே கூறியதுபோன்று அல்லாஹ் திருக்குர்ஆனில் மிகவும் தெளிவாக அனைத்துத்

தூதர்கள் மீதும் நாம் நம்பிக்கைக் கொள்ள வேண்டும் என்று கூறுகின்றான். இவ்வாறு நாம் நம்பிக்கை கொள்ளும்போது, பல்வேறு மரபுகளும் பல்வேறு மதங்களும் ஒருபோதும் நமக்கிடையே எந்த வகையிலான வெறுப்பையும் உருவாக்க முடியாது. மக்கள், இஸ்லாம் தீவிரவாதத்தை மிகவும் விரும்பும் மார்க்கமாகும் என்று கூறுகின்றனர். இது இஸ்லாத்தின் போதனையின் உண்மை நிலை அல்ல. எந்த மக்கள் இது போன்ற பணியைச் செய்கின்றனரோ, அவர்கள் இஸ்லாத்தைப் புரியாத மக்களாக இருக்கின்றனர். அவர்கள் ஒருபோதும் அதற்கேற்பச் செயல்படவும் இல்லை. இது கடந்த வருடம் நடந்த ஒரு சம்பவமாகும். ஒரு பிரெஞ்சு பத்திரிகையாளர் தாயிஷ் தீவிரவாதிகள் இருந்த பகுதிக்குச் சென்றார். அவர் அந்த தீவிரவாத அமைப்பிலுள்ள உறுப்பினர்களிடம் நீங்கள் பிறருக்கு அநீதி இழைக்கின்ற செயல்களில் ஈடுபடுகின்றீர்கள். இது திருக்குர்ஆனின் போதனையா? என்று அவர்களிடம் கேட்டார். அப்போது அவர்களில் அதிகமானோர் நாங்கள் திருக்குர்ஆனையும் படித்ததில்லை. அதன் போதனை என்ன என்பதும் எங்களுக்குத் தெரியாது. எங்களது தலைவர்கள் கூறுவதே எங்களுக்குத் தெரியும். அதை நாங்கள் செய்கின்றோம். அப்பாவி மக்களைக் கொல்வது, இரத்தம் சிந்த வைப்பது ஆகியவை இஸ்லாத்தின் போதனை அல்ல. இது இவர்கள் சுயமே செய்கின்ற செயல்களாகும். அவர்களது தலைவர்கள் என்ன கூறுகின்றனரோ அதையே அவர்கள் செய்கின்றனர்.

இஸ்லாம் இதுபோன்ற போதனைகளை ஒருபோதும் வழங்கியதில்லை. ஒரு நீண்ட காலகட்டமாக துன்பங்களைச் சகித்த பிறகு இஸ்லாத்தின் தோற்றுனரான ஹஸ்ரத் முஹம்மது ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு மக்காவில் இருந்து மதீனாவிற்கு இடம்பெயர்ந்து வர வேண்டியதிருந்தது. அங்கும் நிராகரிப்பவர்கள் அவர்கள் மீது தாக்குதல் தொடுத்தனர் என்பதையே உண்மையான வரலாறு எடுத்துக் கூறுகின்றது. அந்த சமயத்தில் அல்லாஹ் அவர்களுக்கு போர் செய்வதற்கான அனுமதியை வழங்கினான். அது பற்றியும் திருக்குர்ஆனில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதாவது அநீதி இழைப்பதிலிருந்து அவர்களது கைகளைத் தடுத்து நிறுத்தாமல் இருந்தால், இவர்கள் மார்க்கத்தின் எதிரிகளாக இருப்பதால் இவர்கள் இழைக்கும் அநீதியின் காரணமாக எந்தவோர் ஆலயமும் எஞ்சியிருக்காது. அல்லாஹ்வின் பெயர் கூறப்படும் பள்ளிவாயில்களும் எஞ்சி இருக்காது. பிறகு மக்கள் பள்ளிவாயிலில் ஒன்றுகூடி இறைவனை வணங்க இயலாமல் போய் விடும் என்று திருக்குர்ஆனில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏனைய மதங்களுடன் நல்லிணக்கத்துடன் நடந்து கொண்டவாறு அவர்களுடன் ஒன்றிணைந்து இருப்பதற்கு இஸ்லாம் இத்தகைய வழிமுறையை எடுத்துக் கூறுகிறது. எனவேதான் எங்கெல்லாம் எங்களது பள்ளிவாயில் கட்டப்படுகிறதோ அங்கெல்லாம் அல்லாஹ்வின் அருளால் முன்னரை விட அதிகமாக சரியான இஸ்லாமிய போதனைகளை பரப்பக் கூடியவர்களாக நாங்கள் இருக்கின்றோம். பெரும்பாலும் நான் இந்த கருத்தைக் கூறி வருகிறேன். அதாவது மார்க்கத்தின் எதிரிகள் மார்க்கத்தை அழிப்பதற்கு முயற்சி செய்கின்றனர். இதன் காரணமாக அவர்களது கைகளை நாம் அநீதி இழைப்பதிலிருந்து தடுக்காமல் இருந்தால், இவர்கள் ஒவ்வொரு மதத்தையும் அழித்து விடுவர் என்ற இந்த திருக்குர்ஆன் வசனமானது நமக்கு இன்னொரு விஷயத்தின் பக்கமும் கவனமூட்டுகிறது. அதாவது ஒவ்வோர் அஹ்மதியும் எங்கு தமது பள்ளிவாயிலைப் பாதுகாக்கக் கூடியவராக இருக்கின்றாரோ அங்கு அவர் ஆலயத்தைப் பாதுகாக்கக்கூடியவராகவும் இருக்க வேண்டும். யூதர்களின் மடங்களையும் ஏனைய மதத்தினரின் வணக்கஸ்தலங்களையும் பாதுகாப்பவராக அவர் இருக்க வேண்டும். இந்த கருத்தின் அடிப்படையிலேயே நாங்கள் பள்ளிவாயில்களைக் கட்டுகிறோம். ஏனென்றால் பள்ளிவாயில்களைக் கட்டிய பிறகு நமது பள்ளிவாயில்களைப் பாதுகாப்பது எவ்வாறு நமது கடமையாக இருக்கின்றதோ, அந்த பள்ளிவாயிலை தூய்மையாக வைத்திருப்பதும் அதன் சுற்றுச் சூழலைத் தூய்மையாக வைத்திருப்பதும் எவ்வாறு நமது கடமையாக இருக்கின்றதோ அவ்வாறே நமது பகுதியில் இருக்கின்ற ஏனைய மதங்களின் வணக்கஸ்-தலங்களையும் நாம் பாதுகாக்க வேண்டும். அவற்றின் சுற்றுச்சூழலையும் தூய்மையாக வைத்திருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். நேஷனல் அஸெம்பிலியின் உறுப்பினர் அவர்கள் தமது எண்ணங்களை இங்கு வெளிப்படுத்திக் கூறினார்கள். அஹ்மதிகள் இந்த சமுதாயத்தின் ஓர் அங்கமாக மாறிவிட்டார்கள். மேலும் இந்த மக்களுடன் ஒன்றி விட்டார்கள் என்பதை எல்லா சொற்பொழிவாளர்களுமே இங்கு எடுத்துக் கூறியுள்ளனர். இது மிகவும் நல்ல விஷயமாகும். இது ஒவ்வோர் அஹ்மதியிடமும் இருக்க வேண்டிய தனிச்சிறப்பாகும். இது இல்லாமல் இருந்தால் அந்த அஹ்மதி இஸ்லாத்தின் உண்மையான போதனை-களுக்கேற்ப செயல்படாமல் இருக்கின்றார் என்பதே அதன் பொருளாகும். ஒருவருக்கு ஜெர்மனியில் குடியுரிமை கிடைத்த பிறகு அவர் பாகிஸ்தானிலிருந்து வந்த அஹ்மதியாக இருந்தாலும் சரி அல்லது ஆப்பிரிக்காவிலிருந்து வந்திருந்த அஹ்மதியாக இருந்தாலும் சரி அல்லது வேறு எந்த நாட்டிலிருந்து வந்திருந்த அஹ்மதியாக இருந்தாலும் சரி அந்த அஹ்மதி ஜெர்மன் நாட்டின் குடிமகனாக இருக்கும் பட்சத்தில் தனது நாட்டுடன் நன்றி உணர்வுடன் நடந்து கொள்வது அவர் மீது கடமையாக இருக்கின்றது. அவர்களது பழைய குடியுரிமை முடிந்து விட்டது. பாகிஸ்தானிலிருந்து இங்கு இடம்பெயர்ந்து வந்துள்ள அஹ்மதிகள் இப்போது ஜெர்மன் நாட்டின் குடிமக்களாக இருக்கின்றனர். நாட்டுப்பற்று ஈமானின் ஒரு பகுதியாகும் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியிருப்பதால், எந்த நாடுகளில் அஹ்மதிகள் வாழ்ந்தாலும் அந்த நாட்டின் மீது அன்பு கொள்வதும் அதன்


குமரி மாவட்டத்தில்
இஸ்லாமிய புத்தகங்கள் மற்றும்
பத்ர் வார இதழ் சம்பந்தமாக
**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**
1029, கேப் ரோடு (அரசுப் பள்ளி எதிரில்)
இடலாக்குடி, கோட்டார், நாகர்கோவில்.
Cell : 9791305610
Email : amjnagercoil@gmail.com



**திருக்குர்ஆனிலிருந்து...**

*தங்கள் செல்வத்தை மக்களுக்குக் காட்டுவதற்காகச் செலவு செய்வோரும், அல்லாஹ்விடத்தும், இறுதி நாளிடத்தும், நம்பிக்கை கொள்ளாதவரும் (ஷைத்தானின் கூட்டாளியாவர்.).... (4:39)*

**முஹம்மது ஹுஸைன்**
பழனி

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அதிகமான யூகங்களிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். ஏனெனில், சில யூகங்கள் பாவமாகும். பிறர் குற்றங்களைத் தேடி அலையாதீர்கள். உங்களுள் ஒருவருக்-கொருவர் புறங்கூறாதீர்கள்.... (49:13)*

**மர்ஹூமா இலாஹி ஜைனப் கனி**
மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நம்பிக்கை கொண்டவர்களே! ஒரு சமுதாயத்தினர் இன்னொரு சமுதாயத்தினரை ஏளனம் செய்ய வேண்டாம். ஒருவேளை அவர்கள் இவர்களை விடச் சிறந்தவர்களாக இருக்கலாம்..... (49:12)*

**M.Y. ஷாஹுல் ஹமீது**
மற்றும் குடும்பத்தினர், திருச்சி.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*மேலும் அல்லாஹ்விடம் நீங்கள் செய்திருக்கும் உடன்படிக்கையை நிறைவேற்றுங்கள். அல்லாஹ்வை உங்கள் பொறுப்பாளியாக்கிச் சத்தியங்களை உறுதிப்படுத்திய பின்னர், அவற்றை முறிக்காதீர்கள். நிச்சயமாக, அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிகின்றான். (16:92)*

**பீ.ஜே. சுலைமான்**
மற்றும் குடும்பத்தினர், கோயம்புத்தூர்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நம்பிக்கை கொண்டு, நற்செயல்கள் செய்கின்றவர்களுக்கு, மன்னிப்பும் மகத்தான நற்பலனும் (விதிக்கப்பட்டு) உள்ளனவென்று அல்லாஹ் அவர்களிடம் வாக்குறுதியளித்துள்ளான். (5:10)*

**S. முஹம்மது இஸ்மாயீல்**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் நீதியை நிலைநாட்டுவதில் நிலைத்திருங்கள். உங்கள் சாட்சியம் உங்களுக்கோ உங்கள் பெற்றோருக்கோ நெருங்கிய உறவினர்களுக்கோ எதிராக இருப்பினும், அல்லாஹ்வுக்காக சாட்சி கூறுபவர் களாயிருங்கள்.... (4:136)*

**S.H. வஸீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்

## திருக்குர்ஆனிலிருந்து...

**நிச்சயமாக அல்லாஹ் இறையச்சமுடையவர்களுடனும், நன்மை செய்கின்றவர்களுடனும் இருக்கின்றான்.** (16:129)

**ஜோதி அஸ்டின்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

மேலும் எவர்கள் நம்மைச் சந்திக்க முயற்சிப்பார்களோ அவர்களை நிச்சயமாக நாம், நம் வழிகளில் நடத்துவோம். நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்பவர்களுடன் இருக்கின்றான். (29:70)

**அன்ஸருத்தீன்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, கோயம்புத்தூர்.

## திருக்குர்ஆனிலிருந்து...

**எவர்கள் மீது போர் தொடுக்கப்பட்டதோ, அவர்களுக்குப் [போரிட] அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில், அவர்கள் மீது அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. மேலும், நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கு உதவ ஆற்றல் உள்ளவனாவான்.** [22:40]

**லஜ்னா இமாயில்லாஹ்**
ஆதம்பாக்கம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

(உங்கள்) மார்க்கத் தொடர்பாக உங்களுடன் போர் செய்தவர்களுக்கும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாதவர்களுக்கும் நீங்கள் நன்மை செய்து, அவர்களிடம் நீதியாக நடப்பதை அல்லாஹ் தடுக்கவில்லை. அல்லாஹ் நீதியாக நடப்பவர்களை நேசிக்கின்றான். (60:9)

**A. பஷீர் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நன்மையும், தீமையும் ஒன்றாகாது. நீர் மிக அழகியவற்றால் (தீமையை) எதிர்ப்பீராக. எவருக்கும் உமக்குமிடையில் பகைமை உள்ளதோ அவர், அதன் விளைவாக உம்முடைய நெருங்கிய நண்பராக ஆகிவிடுவார். (41:35)

**A. சம்சுல் ஆலம்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நிச்சயமாக நம்பிக்கையாளர்கள் சகோதரர்கள் ஆவர். எனவே, சகோதரர்களுக்கிடையில் நீங்கள் சமாதானத்தை ஏற்படுத்துங்கள். உங்களுக்கு கருணை காட்டப்படுவதற்கு, நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். (49:11)

**மர்ஹூம் முஹம்மது ஸாலிஹ்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஒரு நபர், இறைவன் ஒருவன் என்றும் அவனுக்கு இணையில்லை என்பதையும் ஏற்றுக் கொண்ட பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொள்ளாமல் இரட்சிப்பைப் பெற்று விடுவார் என்று எண்ணுகிறார் என்றால் அவரது உள்ளம் தொழுநோயால் பீடிக்கப்பட்டிருக்கின்றது. அவர் குருடராவார். (ஹகீகத்துல் வஹீ. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா**
**ஆதம்பாக்கம்**

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இறை வணக்கத்திலும் எந்தவொரு Tax - வரியும் இல்லை. அதிலும் ஓர் இன்பமும் மகிழ்ச்சியும் இருக்கின்றது. அந்த இன்பம் எல்லா இன்பங்களை விடவும் உயர்வானதாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 159-160)

**மர்ஹூம் A.M. செய்யது அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தொழுகையை விடுவதற்காக வேண்டாத காரணங்கள் சொல்வது நஃப்ஸின் பலவீனம் தவிர வேறு எதுவும் இல்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 265; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

**மர்ஹூம் A.N.A. ஹாஃபிஸ்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்ளாமல் தவ்ஹீதை ஏற்றுக் கொள்வதால் மட்டும் ஒருவருக்கு ஈடேற்றம் கிடைத்து விடும் என்ற கொள்கையை உடைய மக்கள் மறைமுகமாக முர்தத்(மார்க்கத்தைத் துறந்து சென்றவர்)களாவர். (ஹகீகத்துல் வஹீ. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**அன்னல் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஒருபுறம் முழு உலகமும் நம்மை அழிப்பதற்காக ஒன்று திரண்டது. மறுபுறம் அந்த வல்லமைமிக்க இறைவன் அவர்களின் ஒவ்வொரு தாக்குதல்களிலிருந்தும் என்னைக் காப்பாற்றுகின்றான். (ஹகீகத்துல் வஹீ. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**மர்ஹூம் T. அப்துர் ரஹ்மான்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தொழுகை (நிறைவேற்றப்படாமல்) மன்னிக்கப்படுவதில்லை. எந்த அளவுக்கு எனில் தூதர்களுக்கு கூட மன்னிக்கப்படவில்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 263; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

**M.Y. கன்சுல் ஆயிஷா**
சத்ர் லஜ்னா இமாயில்லாஹ், உடன்குபடி.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தூய்மையான முழுமையான தவ்ஹீது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக மட்டுமே கிடைக்கின்றது. (ஹகீகத்துல் வஹீ. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**S.A. அப்துல் ஹக்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இரட்சிப்பின் தலையூற்றாக இருக்கின்ற அந்த முழுமை பெற்ற தவ்ஹீதை அந்த முழுமை பெற்ற நபியைப் பின்பற்றாமல் பெறவே முடியாது. (ஹகீகத்துல் வஹீ. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூம் சேக் அப்துல் காதிர்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தூதரை பின்பற்றாமல் ஏகத்துவத்தை ஏற்றுக் கொண்டதாக வாதம் செய்பவரிடம் காய்ந்துபோன எலும்புத் துண்டு மட்டுமே இருக்கின்றது. அதில் எந்த சத்தும் இல்லை. அவரது கையில் அணைந்து போன ஒரு தீபம் மட்டுமே இருக்கின்றது. (ஹகீகத்துல் வஹீ. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**அட்வகேட் சலீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

உயிருள்ள இறைவனின் உயிருள்ள ஆற்றல்களை மனிதன் பார்க்காத வரை ஷய்த்தான் அவனது உள்ளத்திலிருந்து வெளியேற மாட்டான். உண்மையான தவ்ஹீதும் அவனது உள்ளத்தில் நுழைய முடியாது என்ற விஷயமே உண்மையானதாகும். (ஹகீகத்துல் வஹீ. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**ஜலாலுத்தீன்**
சத்ர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், தூத்துக்குடி.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

நபி (ஸல்) அவர்கள் அரபு நாட்டிலுள்ள நாத்திகர்களுக்கும் தீய மார்க்கத்தை உடையவர்-களுக்கும் விண்ணின் ஆயிரக்கணக்கான அடையாளங்களைக் காண்பித்து இறைவன் இருக்கின்றான் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளும்படி செய்துள்ளார்கள். (ஹகீகத்துல் வஹீ. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூம் M.K.S. முஹையுத்தீன் அலி**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

அறிவற்றவர்களே! இறைவனின் இருப்பின் மீது முழுமையான உறுதி ஏற்படாமல் அவனது ஏகத்துவத்தின் மீது எவ்வாறு உறுதி ஏற்பட முடியும்? (ஹகீகத்துல் வஹீ. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூமா நதீரா பேகம்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 14 December 2017 Issue No. 50

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/- (Per Issue Rs. 6/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

முன்னேற்றத்திற்காகப் பணியாற்றுவதும் அவர்கள் மீது கடமையாகும். அங்குள்ள மக்களிடம் அன்பு, அமைதி மற்றும் நேசத்தின் தூதுச்செய்தியை எட்ட வைக்க வேண்டும். அதைப் பரப்பவும் வேண்டும். இந்த விஷயங்களுக்கு ஏற்ப நாம் செயல்பட்டால் இஸ்லாத்தின் போதனைகள் எங்களது பாதுகாப்பிற்கு எதிராக இருக்கின்றது என்று எவராலும் கூற முடியாது. எனவே, அஹ்மதிகள் இந்த போதனைகளுக்கேற்ப அதிகமாகச் செயல்படுவதுடன் இதுவே இஸ்லாத்தின் உண்மையான போதனையாகும் என்பதையும் மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டும். எங்களிடமிருந்து அன்பு, நேசம், நல்லிணக்கம் ஆகியவற்றைத் தவிர வேறு எதுவும் உங்களுக்கு கிடைக்காது. அதாவது, இவற்றைத் தவிர எங்களிடமிருந்து வேறு எதுவும் உங்களுக்குத் தென்படாது. எங்களின் இந்த பள்ளிவாயில் கட்டப்பட்ட பிறகு இங்கு வசிக்கின்ற அஹ்மதிகள் முன்பை விட அதிகமாக இங்குள்ள மக்களுக்குரிய உரிமையை செலுத்துபவர்களாக இருப்பதை நீங்கள் காண்பீர்கள். ஏனென்றால், இதுவும் கூட திருக்குர்ஆனிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகளிலும் குறிப்பிடப்பட்டுள்ள போதனை ஆகும். அதாவது உங்களது அண்டை வீட்டுக்காரருடைய உரிமைகளையும் நீங்கள் செலுத்த வேண்டும். உங்களோடு பணிபுரிபவர்களும் உங்களது அண்டை வீட்டுக்காரர்களே ஆவர். உங்களுடன் பயணம் செய்கின்ற மக்களும் உங்களது அண்டை வீட்டுக்காரர்களே ஆவர். தினந்தோறும் மக்களுக்கு தமது பணிகள் நிமித்தமாக பல மைல்கள் பயணம் செய்ய வேண்டியது வருகிறது. பேரூந்துகளிலும், இரயில்களிலும் செல்ல வேண்டியது வருகிறது. அந்நிலையில் அவர்களோடு பயணம் செய்பவர்கள் அவர்களது அண்டை வீட்டுக்காரர்களாக ஆகி விடுவர். அவர்களைப் பற்றி உங்களுக்குத் தெரிந்திருந்தாலும் தெரியாதிருந்தாலும் சரியே.

இஸ்லாத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: அல்லாஹ் என்னிடம் அண்டை வீட்டுக்காரர் -களுக்குரிய உரிமையைச் செலுத்துவதன் பக்கம் எந்த அளவு வலியுறுத்திக் கூறியுள்ளான் என்றால், எனது வாரிசுகளுக்காக நான் விட்டுச் செல்பவற்றிலும் கூட ஒருவேளை அவர்களையும் உரிமையுள்ளவர்களாக ஆக்கி விடுவானோ என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இதுவே இஸ்லாத்தில் அண்டை வீட்டுக்காரர்களுக்குரிய உரிமையைச் செலுத்துவது தொடர்பாக கூறப்பட்டுள்ள முக்கியப் போதனையாகும். இவ்வகையில் அண்டை வீட்டுக்காரர்களுக்குரிய உரிமையைச் செலுத்துவது நம்மீது கடமையாக இருக்கின்றது. இந்த கடமையை நாம் நிறைவேற்ற வேண்டும். இந்த பள்ளிவாயில் கட்டப்பட்ட பிறகு எங்களது இந்த பள்ளிவாயிலுக்கு அருகில் இருப்பவர்களும் இறைவனை வணங்குவதற்காக இங்கு வருகின்ற அனைவரும் அவர்களது அண்டை வீட்டுக்காரர்களாக இருக்கின்ற எங்களிடமிருந்து முன்னரை விட அதிகமாக அமைதி, சாந்தி, அன்பு, நேசம் ஆகியவற்றை பெறக் கூடியவர்களாக இருப்பர் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது - இன்ஷா அல்லாஹுத்தஆலா. நாங்கள் ஒவ்வொரு விவகாரத்திலும் அன்பு, நேசம் என்பதை வாயளவில் மட்டும் கூறுபவர்களாக இருக்க மாட்டோம். மாறாக செயலளவில் உங்களுடன் இணைந்து அதைப் பரப்பக் கூடியவர்களாகவும் இருப்போம் - இன்ஷா அல்லாஹுத்தஆலா. அது அல்லாமல் எந்தவொரு மார்க்கத்தாலும் எந்தவொரு பயனும் ஏற்படாது. எந்த போதனையினாலும் பயன் ஏற்படாது. பல்கலைக்கழகங்களில் படித்த பிறகும் கூட நாம் தீவிரவாத செயல்களில் ஈடுபடுபவர்களாக இருந்தால் அந்த கல்வியினால் எந்தப் பயனும் இல்லை. ஒரு மார்க்கத்தில் இணைந்த பிறகு தீவிரவாதத்தை விரும்புபவர்களாக நாம் இருந்தால் அந்த மார்க்கம் பயனற்ற மார்க்கமாகும். அன்பையும் நேசத்தையும் பரப்புகின்ற மார்க்கமே உண்மையான மார்க்கமாகும். இதுவே இஸ்லாத்தின் போதனையாக இருக்கின்றது. பள்ளிவாயில் கட்டப்பட்ட பிறகு நீங்கள் முன்னரை விட அதிகமாக அஹ்மதிகளிடமிருந்து அன்பு, நேசம், அனுதாப உணர்வு, சகோதரத்துவம் ஆகியவை தொடர்பான முழக்கங்களையே கேட்பீர்கள் என்று நான் நம்புகின்றேன் - இன்ஷா அல்லாஹுத்தஆலா. நன்றி!

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

இறைவன் புறமிருந்துள்ள முன்னறிவிப்பாக இல்லாமல் இருந்திருந்தால் எதிர்ப்பின் புயல் வீசியபோது பஞ்சாபிலும் இந்தியாவிலும் உள்ள மக்கள் எந்த அளவு என்னுடன் சீர்கேடாக நடந்து கொண்டனர் என்றால் அவர்கள் என்னை தமது கால்களுக்கு கீழே நசுக்கி விட விரும்பினர். அப்போது மக்கள் தமது உயிரை மாய்த்துக் கொண்டு செய்யும் முயற்சிகளில் கண்டிப்பாக வெற்றி பெற்றிருக்க வேண்டும். மேலும், அவர்கள் என்னை அழித்திருக்க வேண்டும். ஆனால், அவர்கள் அனைவரும் தோல்வியைத் தழுவினர். அவர்கள் தரப்பிலிருந்து இந்த அளவு கூச்சலும், என்னை அழிப்பதற்கு இந்த அளவுக்கு அவர்கள் முயற்சியும், எனக்கு எதிராக உருவாகியுள்ள இந்த வலுவான புயலும், இறைவன் என்னை அழிக்க நாடியிருந்தான் என்பதனால் உருவானவை அல்ல என்பதை நான் அறிவேன். மாறாக, இறைவனின் அடையாளம் வெளிப்படுவதற்காகவும், எவரிடத்திலும் தோல்வியடையாத வல்லமையுள்ள இறைவன் இந்த மக்களுக்கு எதிரில் தனது சக்தியையும் ஆற்றலையும் காட்டுவதற்காகவும், தனது வல்லமையின் அடையாளத்தை காட்டுவதற்காகவும் இவை உருவாகின. பிறகு, அந்த இறைவன் அவ்வாறே செய்து காட்டினான். நான் ஒரு சிறிய விதையாக விதைக்கப்பட்ட சமயத்தில் அதற்கு பிறகு ஆயிரக்கணக்கான கால்களுக்குக் கீழ் நான் நசுக்கப்பட்டேன். மேலும் புயல்கள் வீசின. வெள்ளம் வந்தது. கிளர்ச்சியின் கூச்சல் ஒரு வெள்ளப்பெருக்கைப் போன்று எனது இந்த சிறு விதையின் பக்கம் திரும்பியது. இவ்வாறிருந்தும் நான் இந்த துக்கங்களிலிருந்து தப்பித்து விடுவேன் என்பதை எவர் அறிந்திருந்தார்? மேலும், எவரது அறிவில் இந்த விஷயம் இருந்தது? அந்த விதை இறைவனின் அருளால் வீணாகி விடவில்லை. மாறாக, அது வளர்ந்தது; மலர்ந்தது. இன்று அது ஒரு பெரும் மரமாக இருக்கின்றது. அதன் நிழலின் கீழ் மூன்று இலட்சம் மனிதர்கள் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கின்றனர். இது இறைவனின் பணியாகும். மனித சக்திகளால் இதை அறிந்து கொள்ள இயலாது. அந்த இறைவன் எவரிடமும் தோல்வியடைய மாட்டான். மக்களே! எப்போதாவது இறைவனுக்கு வெட்கப்படுங்கள். இதற்கு இணையான ஒன்றை இட்டுக்கட்டி பொய் கூறுகின்ற ஒருவரது வாழ்க்கையிலிருந்து உங்களுக்கு எடுத்துக் காட்ட முடியுமா? இது மனிதனின் பணியாக இருக்குமேயானால் நீங்கள் என்னை எதிர்த்து என்னை அழிப்பதற்காக இந்த அளவு துன்பங்களை சகிக்க வேண்டிய எந்த அவசியமும் இல்லை. மாறாக, என்னை அழிப்பதற்கு இறைவனே போதுமானவனாக இருக்கின்றான். நாட்டில் பிளேக் நோய் பரவியபோது பல மக்களும் இந்த நபர் பிளேக் நோயால் அழிந்து விடுவார் என்று வாதம் செய்தனர். ஆனால், இறைவனின் வியக்கத்தக்க வல்லமையினால் அந்த எல்லா மக்களும் சுயமே பிளேக் நோயினால் அழிந்து விட்டனர். இறைவன் என்னை நோக்கி நான் உம்மை பாதுகாப்பேன். பிளேக் நோய் உமக்கு அருகில் வராது என்று கூறினான். இன்னும் சொல்வதென்றால், நான் மக்களிடம் நெருப்பினால் (அதாவது பிளேக் நோயால்) எம்மை அச்சுறுத்த வேண்டாம். நெருப்பு நமது அடிமை மட்டுமல்ல. மாறாக, நமது அடிமைகளின் அடிமையாகும் என்று கூறுமாறு அவன் என்னிடம் கூறினான். மேலும், அவன் என்னிடம் நான் உமது இந்த வீட்டைப் பாதுகாப்பேன். இந்த வீட்டின் நான்கு சுவர்களுக்குள் இருக்கின்ற ஒவ்வொருவரும் பிளேக்கிலிருந்து பாதுகாப்பாக இருப்பார்கள் என்றும் கூறினான். பிறகு அவ்வாறே நடந்தது. அக்கம் பக்கத்திலுள்ள அனைவருக்கும் தெரியும். அதாவது, பிளேக் நோயின் தாக்குதலின் காரணமாக பல கிராமங்கள் அழிந்து போயின. நமக்கு, அக்கம் பக்கத்தில் கியாமத்தின் முன்மாதிரி தென்பட்டது. ஆனால், இறைவன் எம்மைப் பாதுகாத்தான்.

(ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 261)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad